This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

சுராவின்

# பொருளியல்

## 12 ஆம் வகுப்பு

**2019 - 20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.**

**சிறப்பம்சங்கள் :**

- பாடப்பகுதியில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் மிகுதியான அளவில் கூடுதல் வினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.
- கொள்குறி (Objective) வகையிலான 1 மதிப்பெண் வினாக்கள் கீழ்கண்ட தலைப்புகளில் தரப்பட்டுள்ளன.
    1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்
    2. பொருத்துதல்
    3. கோடிட்ட இடத்தை நிரப்புதல்
    4. பொருந்தாததை கண்டறிதல்
    5. கூற்று மற்றும் காரணம்
    6. சரியான கூற்றைக் கண்டறிதல்

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

**2019-20 புதிய பதிப்பு**
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-81-8449-990-2**
**குறியீட்டு எண் : SG 109**

*எழுதி வழங்கியவர்*

**A. முகமது** M.A., M.Phil., B.Ed. சென்னை
**M. ரஹிமா ஆயிஷா** M.com., M.Phil. நாமக்கல்
**L. சோமசுந்தரம்** M.A., M.Ed., M.Phil. கோயம்புத்தூர்

*திருத்தியவர்*

**T. சாந்தி** M.A., B.Ed. திருச்சி
**A. வேல்முருகன்** M.A., B.Ed. சேலம்

*மதிப்பாளர்*

**Dr. M. முனி ரத்தினம்** M.A., M.Phil., Ph.D., சென்னை

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-26161088, 26161099
**e-mail :** enquiry@surabooks.com
**website :** www.surabooks.com

**Our Guides for XI Standard**

- Sura's Tamil
- Sura's English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை

12ம் வகுப்பிற்கான சுராவின் **பொருளியல்** வழிகாட்டியை வெளியிடுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம். பொருளியல் பாடங்களுக்கான வினா விடைகள் / பயிற்சிகள் மிகவும் எளிமையாக, சுலபமாக புரிந்துகொள்ளும் விதத்தில் தரப்பட்டுள்ளன.

சுராவின் பொருளியல் வழிகாட்டி மாணவர்களின் எல்லாத் தேவைகளையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பாடநூலை நன்கு மதிப்பாய்வு செய்து மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் வெகுவாக உட்கிரகித்து அறிந்துகொண்டு தேர்வை சுலபமாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெற்று வெற்றியாளர்களாகும் விதத்தில், நமது வெற்றிக்கான இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு பாடம் நடத்துவதிலும், மாணவர்களுக்குக் கற்றுக்கொள்வதிலும் இந்த வழிகாட்டி துணையாக இருக்கும்.

அரசு பொதுத் தேர்வுக்கான **புதிய மதிப்பீட்டு முறையில் 100 மதிப்பெண்கள் வடிவமைப்பில், 90 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வின் வினாத்தாள் அடிப்படையில்** நமது வழிகாட்டி உருவாக்கப்பட்டுள்ளதால், தேர்வுகளை மிகச் சரியான விதத்தில் எதிர்கொள்ளலாம்.

நமது சுராவின் பொருளியல் வழிகாட்டியில் இது போன்ற பல சிறப்பம்சங்கள் அடங்கியிருந்தாலும், பொருளியல் பாடத்தை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவிடும் ஆசிரியர்களின் பணியும் மகத்தானது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
- பதிப்பகத்தார்

*வாழ்த்துக்கள் !!!*

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 9600175757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **36550290536** | Our A/c No. : **21000210001240** |
| Bank Name : **STATE BANK OF INDIA** | Bank Name : **UCO BANK** |
| Bank Branch : PADI | Bank Branch : Anna Nagar West |
| IFSC : SBIN0005083 | IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications** | A/c Name : **Sura Publications** |
| Our A/c No. : **6502699356** | Our A/c No. : **1154135000017684** |
| Bank Name : **INDIAN BANK** | Bank Name : **KVB BANK** |
| Bank Branch : ASIAD COLONY | Bank Branch : Anna Nagar |
| IFSC : IDIB000A098 | IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
**email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.**

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-26162173, 26161099.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# பொருளடக்கம்

| பாட எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பேரியல் பொருளாதாரம் | 1 - 24 |
| 2. | தேசிய வருவாய் | 25 - 50 |
| 3. | வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள் | 51 - 72 |
| 4. | நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள் | 73 - 94 |
| 5. | பணவியல் பொருளியல் | 95 - 116 |
| 6. | வங்கியியல் | 117 - 138 |
| 7. | பன்னாட்டுப் பொருளியல் | 139 - 164 |
| 8. | பன்னாட்டு பொருளாதார அமைப்புகள் | 165 - 184 |
| 9. | நிதிப் பொருளியல் | 185 - 210 |
| 10. | சுற்றுச்சூழல் பொருளியல் | 211 - 232 |
| 11. | பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல் | 233 - 256 |
| 12. | புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம் | 257 - 284 |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

அத்தியாயம் 1

# பேரியல் பொருளாதாரம்

## பொருளடக்கம்

1.1 அறிமுகம்
1.2 பேரியல் பொருளாதாரத்தின் பொருள்
1.3 பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்
1.4 பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை
1.5 குறைகள்
1.6 பொருளாதார அமைப்பு மற்றும் அதன் வகைகள்
1.7 பொருளாதார அமைப்பு முறைகள்
1.7.1 முதலாளித்துவ பொருளாதார அமைப்பு
1.7.2 சமத்துவ பொருளாதார அமைப்பு
1.7.3 கலப்பு பொருளாதாரம்
1.8 பேரியல் பொருளாதாரத்தின் கருத்துக்கள்
1.8.1 இருப்பு மற்றும் ஓட்டம் மாறிலிகள்
1.8.2 பொருளாதார மாதிரிகள்
1.9 வருவாயின் வட்ட ஓட்டம்
1.9.1 இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்
1.9.2 மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்
1.9.3 நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## கருத்துப் படம்






www.Surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பணவீக்கம் | : | பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும். |
| வாணிப சுழற்சி | : | பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத்தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சனைகளை சந்திக்கின்றது. |
| பேரியல் பொருளாதாரத்தின் பொருள் | : | பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும். |
| பொருளாதார அமைப்பு முறைகள் | : | பொருளாதார அமைப்பு முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும். |
| முதலாளித்துவ பொருளாதார அமைப்பு | : | முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாக கொண்டிருக்கிறது. |
| தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் | : | தனிநபரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பொருட்களை தேர்ந்தெடுப்பதிலும் மற்றும் வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பார். |
| இலாப நோக்கம் | : | முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும். |
| விலை இயங்குதல் முறை | : | விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும். |
| தானாக இயங்குதல் | : | முதலாளித்துவ பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் எந்த தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும். |
| சமத்துவப் பொருளாதார அமைப்பு | : | சமத்துவம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடைமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அரசின் கட்டுப்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும். |
| போட்டி இல்லாமை | : | சமத்துவ பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும். பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியையும் பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. |
| இருப்பு | : | இருப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் கணக்கிடப்படும் பொருட்களின் அளவினை குறிப்பதாகும். |
| ஓட்டம் | : | ஓட்டம் மாறிலிகள் என்பவை ஒரு குறிப்பிட்ட கால கட்ட அளவில் கணக்கிடப்படுபவையாகும். |
| வருவாயின் வட்ட ஓட்டம் | : | ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். |
| இல்லத்துறை | : | இல்லத்துறைதான், பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். |
| பொருளாதார அமைப்பு | : | ஒரு குறிப்பிட்ட பகுதியில் எவ்வாறு மக்களும், நிறுவனங்களும் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பது பொருளாதார அமைப்பாகும். |
| கலப்புத்துவம் | : | முதலாளித்துவ (தனியார் பங்கு) மற்றும் சமத்துவ (நாட்டு பங்கு) கொள்கைகளின் இணைவு ஆகும். |
| உலகியத்துவம் | : | ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளும் மற்ற நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டும், சார்ந்தும் இருப்பதும் உலகியத்துவம் ஆகும். |



www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

# இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| டான் புஸ், பிஸ்சார், ஸ்டார்டிஸின் பேரியல் பொருளாதார இலக்கணம் | : | பேரியல் பொருளதாரம் என்பது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது பற்றியதே என்கின்றனர். |
| ஏ.ஜே. பிரவுணின் பொருளாதார அமைப்பு இலக்கணம் | : | ஏ.ஜே. பிரவுண் என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" ஆகும். |
| ஜே. ஆர். ஹிக்ஸின் பொருளாதார அமைப்பு இலக்கணம் | : | ஜே. ஆர். ஹிக்ஸ் "நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" எனக் கூறுகிறார். |
| மேன்பிரட்டிஸ்டீகரின் உலகத்துவ வரைவிலக்கணம் | : | "பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர் நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடித் தத்துவத்தை குறிப்பிடுவது உலகத்துவம் என்ற மேன்பிரட்டிஸ்டீகர் கூறுகிறார்." |
| சமத்துவப் பொருளாதார அமைப்பின் இலக்கணம் | : | கார்ல் மார்க்ஸ் சமத்துவத்தின் தந்தை ஆவார். "சமத்துவம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும்." |
| முதலாளித்துவத்தின் இலக்கணம் | : | "முதலாளித்துவம்" என்பது, மூலதனத்தின் உரிமையாளர் என்ற "முதலாளித்துவ" காலத்திற்கு முன்னதாகவே தோன்றியது ஆகும். |
| கலப்புப் பொருளாதாரத்தின் இலக்கணம் | : | "கலப்பு பொருளாதாரத்தில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பொருளாதார கட்டுப்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ள பொதுத்துறை, பொதுவுடைமைக் கொள்கையைக் கடைபிடிக்கிறது. தனியார் துறை தடையில்லா தொழில் முனைவுக் கொள்கையை பின்பற்றுகிறது." |
| வட்ட ஓட்டக் கூற்று | : | குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் நாடுகள் ஆகியவற்றிடையே பணம், பண்டம், பணி ஆகியவற்றின் ஓட்டத்தை விளக்குகிறது. |



# சூத்திரங்கள்

- இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு

$$Y = C + I$$

- மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு

$$Y = C + I + G$$

- நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டச் சமன்பாடு

$$Y = C + I + G + (X - M)$$

www.surabooks.com

# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

1. **பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை**

அ) சொத்து மற்றும் நலமும்
ஆ) உற்பத்தி மற்றும் நுகர்வு
இ) தேவையும் மற்றும் அளிப்பும்
ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்

[விடை: ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்]

2. **"மேக்ரே" (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?**

அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்ஸ்
இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

[விடை: இ) ராக்னர் பிரிக்ஸ்]

3. **"நவீன பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?**

அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்ஸ்
இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

[விடை: ஆ) ஜே. எம். கீன்ஸ்]

4. **பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?**

அ) விலை கோட்பாடு
ஆ) வருவாய் கோட்பாடு
இ) அங்காடி கோட்பாடு
ஈ) நுண்ணியல் கோட்பாடு

[விடை: ஆ) வருவாய் கோட்பாடு]

5. **பேரியல் பொருளாதாரம் என்பது பற்றிய படிப்பு.**

அ) தனிநபர்கள் ஆ) நிறுவனங்கள்
இ) நாடு ஈ) மொத்தங்கள்

[விடை: ஈ) மொத்தங்கள்]

6. **ஜே. எம். கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.**

அ) நாடுகளின் செல்வம் ஆ) பொது கோட்பாடு
இ) மூலதனம் ஈ) பொது நிதி

[விடை: ஆ) பொது கோட்பாடு]

7. **பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து _______ ஆகும்.**

அ) மொத்த விலைக் குறியீடு
ஆ) வாணிபச் சூழல்
இ) பண வீக்கம்
ஈ) தேசிய வருவாய்

[விடை: இ) பண வீக்கம்]

8. **பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக.**

அ) அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது
ஆ) தடைகளை முறியடிப்பது
இ) வளர்ச்சியை அடைவது
ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

[விடை: ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்]

9. **ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.**

அ) உற்பத்தி மற்றும் பகிர்வும்
ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ) உற்பத்தி மற்றும் நுகர்வு
ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை

[விடை: இ) உற்பத்தி மற்றும் நுகர்வு]

10. **ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது.**

அ) உற்பத்தி துறை
ஆ) நுகர்வு துறை
இ) அரசு துறை
ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

[விடை: ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்]

11. **எந்த பொருளாதார அமைப்பில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?**

அ) முதலாளித்துவ அமைப்பு
ஆ) சமத்துவ அமைப்பு
இ) உலகமய அமைப்பு
ஈ) கலப்புப் பொருளாதார அமைப்பு

[விடை: அ) முதலாளித்துவ அமைப்பு]



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**12.** **பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு _______ ஆகும்.**

அ) முதலாளித்துவ அமைப்பு

ஆ) உலகமயத்துவ அமைப்பு

இ) கலப்புப் பொருளாதார அமைப்பு

ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு

[விடை: ஈ) சமத்துவ பொருளாதார அமைப்பு]

**13.** **முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?**

அ) ஆடம்ஸ்மித் ஆ) காரல் மார்க்ஸ்

இ) தக்கேரி ஈ) ஜே.எம். கீன்ஸ்

[விடை: அ) ஆடம்ஸ்மித்]

**14.** **முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு _______ ஆகும்.**

அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா

இ) இந்தியா ஈ) சீனா

[விடை: ஆ) அமெரிக்கா]

**15.** **சமத்துவத்தின் தந்தையை கண்டுபடி.**

அ) ஜே.எம். கீன்ஸ் ஆ) காரல் மார்க்ஸ்

இ) ஆடம்ஸ்மித் ஈ) சாமுவேல்சன்

[விடை: ஆ) காரல் மார்க்ஸ்]

**16.** **தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் _______ ஆகும்.**

அ) முதலாளித்துவ பொருளாதாரம்

ஆ) சமத்துவ பொருளாதாரம்

இ) உலகமயத்துவ பொருளாதாரம்

ஈ) கலப்புப் பொருளாதாரம்

[விடை: ஈ) கலப்புப் பொருளாதாரம்]

**17.** **ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் _______ ஆகும்.**

அ) உற்பத்தி ஆ) இருப்பு

இ) மாறிலி ஈ) ஓட்டம்

[விடை: ஆ) இருப்பு]

**18.** **கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.**

அ) பண அளிப்பு

ஆ) சொத்துக்கள்

இ) வருவாய்

ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

[விடை: இ) வருவாய்]

**19.** **இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக.**

அ) குடும்பங்களும் நிறுவனங்களும்

ஆ) தனியார் மற்றும் பொதுத்துறை

இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள்

ஈ) நிறுவனங்களும் அரசும்

[விடை: அ) குடும்பங்களும் நிறுவனங்களும்]

**20.** **திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது _______ ஆகும்.**

அ) இரு துறை மாதிரி

ஆ) முத்துறை மாதிரி

இ) நான்கு துறை மாதிரி

ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

[விடை: இ) நான்கு துறை மாதிரி]

## பகுதி - ஆ

### கீழ்க்கண்டவற்றுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி :

**21.** **பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**

விடை. டான் புண், பிஸ்சார், ஸ்டார்டிஸ், கூற்றுப்படி "பேரியல் என்பது உண்மைகள் மற்றும் கோட்பாடுகளை ஒருங்கிணைப்பது பற்றியதே" ஆகும்.

**22.** **பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.**

விடை. பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

**23.** **"பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?**

விடை. பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் என்பவர் "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது என்று வரையறுத்துள்ளார்."



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(அல்லது)

ஜே.ஆர். ஹிக்ஸ் நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவை பொருளாதார அமைப்பு என கூறுகிறார்.

**24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

விடை. வளர்ச்சி நிலை 4 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

(i) வளர்ந்த பொருளாதாரம்

(ii) வளராத பொருளாதாரம்

(iii) முன்னேறாத பொருளாதாரம்

(iv) வளரும் பொருளாதாரம்

**25. முதலாளித்துவம் என்றால் என்ன?**

விடை. (i) முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித் ஆவார்.

(ii) முதலாளித்துவப் பொருளாதாரம் தடையில்லா மற்றும் அங்காடி பொருளாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது.

(iii) அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும் சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.

(iv) முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பொருட்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருப்பார்கள்.

**26. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.**

விடை. (i) மாதிரி என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும்.

(ii) பொருளாதார வல்லுநர்கள் பொருளாதார நடவடிக்கைகள் அவைகளுக்கிடையேயான உறவுகள் நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளை பயன்படுத்துகின்றனர்.

(iii) மாதிரி என்பது பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது.

**27. "வருமானத்தின் வட்ட ஓட்டம்" - வரையறு.**

விடை. (i) ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும்.

(ii) இது பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருவாய் பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும்.

## பகுதி - இ

## கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக :

**28. பேரியல்பொருளாதாரத்தின்முக்கியத்துவத்தை தருக.**

விடை. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவங்கள்:

(i) ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அதற்கு தேவையான சரியான யுத்திகளை மாற்றவும் மற்றும் அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

(ii) எதிர்கால பிரச்சனைகளை புரிந்துக் கொள்ளவும், தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.

(iii) நடப்பு பிரச்சனைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறியவும் உதவுகிறது.

(iv) பொருளதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவைகளை ஒப்பிடவும் இது உதவுகிறது.

(v) பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும் சரியான கொள்கைகளை உருவாக்கவும் எதிர்காலத்தில் நடப்பவைகளை முன் கணிக்கவும் இது உதவுகிறது.

**29. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.**

விடை. பொருளாதார அமைப்புகளின் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

(i) **வளர்ச்சி நிலை :** வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்.

(ii) **நடவடிக்கைகளின் முறை :** முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்.

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(iii) **நடவடிக்கைகள் அளவு :** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்.

(iv) **செயல்படும் தன்மை :** நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்.

(v) **செயல் பரப்பு தன்மை :** மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்.

**30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.**

விடை. (i) **தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச் சட்டம் :**

முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில் உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிநபர்களுக்கு சொந்தமாக இருக்கும்.

(ii) **தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம் :**

ஒவ்வொரு தனிநபரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பொருட்களை தேர்ந்தெடுப்பதிலும் மற்றும் வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பார்.

(iii) **இலாப நோக்கம் :**

முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும்.

(iv) **போட்டியில் சுதந்திரம் :**

(i) பொருட்கள் சந்தை மற்றும் காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு.

(ii) அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களில் வாங்குதல் மற்றும் விற்பதில் தலையிட முடியாது.

(v) **விலை இயங்கு முறை :**

விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும்.

(vi) **அரசின் பங்கு :**

முதலாளித்துவ பொருளாதார அமைப்பின், அனைத்து பொருளதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையை கட்டுப்படுத்துவதால், அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும்.

(vii) **வருமான ஏற்றத்தாழ்வு :**

முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாக பிரிக்கப்படுகிறது. சொத்துகளை வைத்திருப்பவர்கள் மற்றும் சொத்துக்கள் இல்லாதவர்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

**31. சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.**

விடை. (i) **சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்:**

அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளை எடுப்பதாலும், அநேக அலுவலர்களின் அனுமதி பெற கோப்புகள் ஒரு மேஜையிலிருந்து மற்றொன்றுக்கு செல்ல எடுக்கும் கால அளவு அதிகமாவதாலும் ஒரு சிகப்பு நாடா நிலைக்கு கொண்டு செல்லப்படும்.

(ii) **ஊக்கமில்லாமை :**

சமத்துவத்தின் மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை எனவே உற்பத்தி திறனும் பாதிக்கப்படும்.

(iii) **தெரிவு செய்வதில் சுதந்திர குறைவு :**

பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

(iv) **அதிகாரம் குவிதல் :**

அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்ச்சியும் எடுப்பது இல்லை.

**32. கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.**

விடை. (i) **சொத்து மற்றும் உற்பத்திச் சாதனங்களின் உரிமம் :**

உற்பத்திச் சாதனங்களும் சொத்துக்களும் தனியார் மற்றும் பொதுத் துறைக்கு சொந்தமாக இருக்கும்.


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**(ii) பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும் :**

கலப்பு பொருளாதாரங்களில் தனியார் மற்றும் பொது துறைகள் இரண்டும் இணைந்திருக்கும்.

**(iii) பொருளாதார திட்டமிடல் :**

மைய திட்டமிடல் அதிகாரம் பொருளாதார திட்டங்களைத் தயாரிக்கும் அரசினால் தயாரிக்கப்படும்.

**(iv) பொருளாதாரப் பிரச்சனைகளுக்குத் தீர்வு :**

எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது யாருக்காக உற்பத்தி செய்வது? மற்றும் எப்படி பகிர்ந்தளிப்பது போன்ற அடிப்படை பிரச்சனைகளை விலை இயக்க முறை மற்றும் அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.

**33. முதலாளித்துவம் மற்றும் சமத்துவத்தை வேறுபடுத்துக.**

விடை.

| வ. எண் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|
| (i) | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| (ii) | இலாபம் | சமூக நலன் |
| (iii) | தலையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |
| (iv) | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| (v) | சமனற்ற நிலை | சமநிலை |

**34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.**

விடை. **(i) இல்லத்துறை :**

இல்லத்துறை தான் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறையாகும். நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும்.

(ii) இல்லத்துறையானது அதற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருவாயை பெறுகிறது.

**(iii) நிறுவனத் துறை :**

நிறுவனத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.




இருதுறை பொருளாதாரத்தில் உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருவாய் மற்றும் பொருட்கள் வட்ட ஓட்டமாகவும் காணப்படும்.

(iv) வெளி வட்டமானது உற்பத்திகாரணிகள் மற்றும் பொருட்கள் பிரதிபலிக்கும் உண்மை ஓட்டமாகவும், உள் வட்டமானது காரணி விலை மற்றும் பொருள் விலையை குறிக்கும் பண ஓட்டமாகவும் காணப்படும்.

இங்கு $Y = C + I$

Y என்பது வருவாய், C என்பது நுகர்வு, I என்பது முதலீடு.

## பகுதி - ஈ

## கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

**35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.**

விடை. **(i) தேசிய வருவாய் :**

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும்.

**(ii) பண வீக்கம் :**

பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும்.

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(iii) வாணிப சுழற்சி :**

- பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத்தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சனைகளை சந்திக்கின்றன.
- மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகிறது.

**(iv) வறுமை மற்றும் வேலையின்மை :**

- வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது.
- இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும். இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**(v) பொருளாதார வளர்ச்சி :**

பேரியல் பகுத்தாய்வின் மூலம்தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள்போன்றவற்றை புரிந்துகொள்ளமுடியும்.

**(vi) பொருளாதார கொள்கைகள் :**

பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**

விடை. (i) ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகும்.

(ii) இந்த இரு நடவடிக்கைகளும் பல்வேறு பிற நடவடிக்கைகளால் உதவப்படுகின்றன.

(iii) இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும். பகிர்வுப்பணியானது உற்பத்தி மற்றும் நுகர்வு பணிகளுக்கு உதவுகின்றன.

(iv) இந்த நடவடிக்கைகள் பல்வேறு பொருளாதார மற்றும் பொருளாதார மற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன. முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாவன (Economic Activity) போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள் ஆகும்.

**செயல்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் பணிகள்**




(v) முக்கிய பொருளாதார மற்ற நடவடிக்கைகளாவன (Non-Economic Activities).சுற்றுச் சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல் போன்றவை ஆகும்.

(vi) பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மற்றும் வருவாய் போன்றவை பொருளாதார அமைப்பின் மொத்த செயல்பாட்டையும் பாதிக்கின்றன.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**37. முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.**

விடை.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் |
|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை |

**38. முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**

விடை.

| வ. எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புதுவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |



www.surabooks.com

# கூடுதல் வினாக்கள்

## பகுதி - அ

### I. சரியான விடையைத் தெரிவு செய்க:

1 மதிப்பெண்

1. பொதுவாக _______ என்பது விலை வீழ்ச்சியை குறிக்கும்.
அ) பணவாட்டம் ஆ) பணவீக்கம்
இ) வாணிபம் ஈ) வளர்ச்சி வீதம்
[விடை: அ) பணவாட்டம்]

2. நுண்ணிய என்பது _______.
அ) பெரிய ஆ) விரிவான
இ) சிறிய ஈ) அ மற்றும் ஆ
[விடை: இ) சிறிய]

3. பேரியல் என்றால் _______.
அ) பெரிய
ஆ) ஒட்டுமொத்த
இ) ஒட்டு மொத்த பொருளாதாரம்
ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்
[விடை: ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்]

4. நுண்ணினப் பொருளாதாரம் _______ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) விலை கோட்பாடு
ஆ) வருமானக் கோட்பாடு
இ) வாணிய சுழற்சி
ஈ) வறுமை மற்றும் வேலையின்மை
[விடை: அ) விலை கோட்பாடு]

5. திட்டமிட்ட பொருளாதாரம் _______ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) முதலாளித்து பொருளாதாரம்
ஆ) சமதர்ம பொருளாதாரம்
இ) கலப்பு பொருளாதாரம்
ஈ) மேற்காணும் அனைத்தும்
[விடை: ஆ) சமதர்ம பொருளாதாரம்]

6. சமதர்ம பொருளாதாரத்தின் தந்தை _______.
அ) ஆடம்ஸ்மித் ஆ) J. M. கீன்ஸ்
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) J. R. ஹிக்ஸ்
[விடை: இ) கார்ல் மார்க்ஸ்]

7. கலப்பு பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டு _______.
அ) இந்தியா ஆ) பிரான்சு
இ) சீனா ஈ) அ மற்றும் ஆ
[விடை: ஈ) அ மற்றும் ஆ]

8. _______ அமைப்பு முறையில், தனியார் மற்றும் பொதுத் துறைகள் இணைந்த பொருளாதாரமாகும்.
அ) முதலாளித்துவம் ஆ) பழமையான
இ) கலப்பு ஈ) சமதர்மம்
[விடை: இ) கலப்பு]

9. சமதர்மப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் _______.
அ) சமூக நலன்
ஆ) சமூக மற்றும் கூட்டு நலன்
இ) இலாபம்
ஈ) அ மற்றும் ஆ
[விடை: ஈ) அ மற்றும் ஆ]

10. அங்காடி சக்திகள் _______.
அ) அளிப்பு மற்றும் விலை
ஆ) தேவை மற்றும் விலை
இ) விலை மற்றும் பண்டம்
ஈ) அளிப்பு, தேவை மற்றும் விலை
[விடை: ஈ) அளிப்பு, தேவை மற்றும் விலை]

11. தனியார் சொத்துமை அதிகமாக காணப்படும் அமைப்பு _______.
அ) பழமையான பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவம்
இ) சமதர்மம்
ஈ) கலப்பு பொருளாதாரம்
[விடை: ஆ) முதலாளித்துவம்]

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



12. 'விலைக் கருவி' காணப்படும் பொருளாதாரம் ______.
அ) சமதர்மம்
ஆ) முதலாளித்துவம்
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) கலப்பு
[விடை: ஆ) முதலாளித்துவம்]

13. அரசின் தலையீட்டின்மையில் இல்லாத பொருளாதார அமைப்பு ______.
அ) சமதர்ம பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவ பொருளாதாரம்
இ) பழமையான பொருளாதாரம்
ஈ) கலப்பு பொருளாதாரம்
[விடை: ஆ) சமதர்ம பொருளாதாரம்]

14. இல்லத்துறை தான் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறை ______.
அ) நிறுவனம்
ஆ) இல்லம்
இ) அரசு
ஈ) அயல்நாட்டு வாணிபம்
[விடை: அ) நிறுவனம்]

15. மாதிரியில், தேசிய வருமானம் என்பது நுகர்வுச் செலவு, முதலீட்டு செலவு மற்றும் அரசின் செலவு ஆகியவற்றை கூட்டுவதால் அடையாலாம்.
அ) ஒரு துறை மாதிரி
ஆ) இரண்டு துறை மாதிரி
இ) மூன்று துறை மாதிரி
ஈ) நான்கு துறை மாதிரி
[விடை: இ) மூன்று துறை மாதிரி]

16. ______ என்பது சமதர்ம பொருளாதாரம் மற்றும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் கலவையாகும்.
அ) சமதர்ம பொருளாதாரம்
ஆ) முதலாளித்துவ பொருளாதாரம்
இ) பழமைப் பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்
[விடை: ஈ) கலப்புப் பொருளாதாரம்]

17. கீழ்கண்டவற்றுள் சமதர்ம பொருளாதாரத்தின் தந்தையை தெரிவு செய்.
அ) ஆடம்ஸ்மித் ஆ) J. M. கீன்ஸ்
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) மார்ஷல்
[விடை: இ) கார்ல் மார்க்ஸ்]

18. கீழ்வருவனவற்றுள் எது மாறும் இருப்பு ______.
அ) செல்வம்
ஆ) வருமானம்
இ) அண்ணியச் செலவாணி
ஈ) பணம்
[விடை: அ) செல்வம்]

19. கீழ்கண்ட பொருளாதார முறையில் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கி பயன்படுத்துவது.
அ) முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ) சமதர்மப் பொருளாதாரம்
இ) உலகத்துவப் பொருளாதாரம்
ஈ) கலப்புப் பொருளாதாரம்
[விடை: ஆ) சமதர்மப் பொருளாதாரம்]

20. கீழ்கண்ட ______ அமைப்பு முறையில் மைய திட்டமே அதிகாரம் மேற்கொள்ளும்.
அ) சமதர்ம பொருளாதாரம்
ஆ) உலகத்துவப் பொருளாதாரம்
இ) கலப்புப் பொருளாதாரம்
ஈ) முதலாளித்துவ பொருளாதாரம்
[விடை: அ) சமதர்ம பொருளாதாரம்]

21. முதலாளித்துவம் ______ போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.
அ) மையத் திட்டம்
ஆ) வகுப்பு
இ) சமூக நலன்
ஈ) மேற்கூறிய அனைத்தும்
[விடை: ஆ) வகுப்பு]




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## II. கீழ்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி சரியாக பொருத்து: 1 மதிப்பெண்

**1.**

| | | | |
|---|---|---|---|
| a) | பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | i) | J. M. கார்ல் மார்க்ஸ் |
| b) | சமதர்ம பொருளாதாரத்தின் தந்தை | ii) | கார்ல் மார்க்ஸ் |
| c) | நுண்ணிய | iii) | சிறிய |
| d) | பேரியல் | iv) | பெரிய |

குறியீடுகள் :

அ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)

ஆ) a-(ii) b-(i) c-(iii) d-(iv)

இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

ஈ) a-(i) b-(iv) c-(ii) d-(iii)

[விடை: அ) a-(i); b-(ii); c-(iii) d-(iv)]

**2.**

| | | | |
|---|---|---|---|
| a) | "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" | i) | வருமானக் கோட்பாடு |
| b) | பேரியல் | ii) | பணவீக்கம் |
| c) | ஒட்டுமொத்த பொருளாதாரம் | iii) | 1936 |
| d) | பொதுவான விலையில் தொடர் உயர்வு | iv) | கிரேக்கம் |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

ஆ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)

இ) a-(iii) b-(iv) c-(i) d-(ii)

ஈ) a-(iv) b-(i) c-(ii) d-(iii)

[விடை: இ) a-(iii); b-(iv); c-(i) d-(ii)]

**3.**

| | | | |
|---|---|---|---|
| a) | சமதர்ம பொருளாதாரம் | i) | தடையில்லா பொருளாதாரம் |
| b) | பழமைப் பொருளாதாரம் | ii) | கட்டளை பொருளாதாரம் |
| c) | கலப்புப் பொருளாதாரம் | iii) | பிழைப்பு மட்ட பொருளாதாரம் |
| d) | முதலாளித்துவ பொருளாதாரம் | iv) | தனியார் துறையும், பொத்துறையும் இணைந்து செயல்படுதல் |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

ஆ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

இ) a-(i) b-(iv) c-(iii) d-(ii)

ஈ) a-(ii) b-(iii) c-(i) d-(iv)

[விடை: அ) a-(ii); b-(iii); c-(iv) d-(i)]

**4.**

| | | | |
|---|---|---|---|
| a) | அரசின் கட்டுபாடு | i) | கலப்புப் பொருளாதாரம் |
| b) | பழமையான பழக்க வழக்கங்கள் | ii) | முதலாளித்துவப் பொருளாதாரம் |
| c) | இலாப நோக்கம் | iii) | சமதர்மப் பொருளாதாரம் |
| d) | தனியார் துறை மற்றும் பொதுத் துறையின் கலவையாகும் | iv) | பழமைப் பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

ஆ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)

இ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)

ஈ) a-(iv) b-(iii) c-(i) d-(ii)

[விடை: ஆ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)]

**5.**

| | | | |
|---|---|---|---|
| a) | சந்தை சக்திகள் | i) | சமத்துவம் |
| b) | ஆட்சியாளர் ஆதிக்கம் | ii) | வளங்களை திறம்பட பயன்படுத்தாமை |
| c) | தனியார் சொத்துரிமை | iii) | அளிப்பு, தேவை மற்றும் விலை |
| d) | காலதாமதம் மற்றும் இலஞ்சம் | iv) | தடையில்லா பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)

ஆ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

இ) a-(ii) b-(iv) c-(i) d-(iii)

ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

[விடை: அ) a-(iii); b-(i); c-(iv) d-(ii)]



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

6.

| | | | |
|---|---|---|---|
| a) | கட்டளை பொருளதாரம் | i) | மேற்கு ஜெர்மனி |
| b) | முதலாளித்துவ நாடு | ii) | க்யூபா |
| c) | சமதர்ம நாடு | iii) | இந்தியா |
| d) | கலப்புப் பொருளாதாரம் | iv) | சமத்துவ பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)
ஆ) a-(iv) b-(i) c-(ii) d-(iii)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

**[விடை: ஆ) a-(iv); b-(i); c-(ii) d-(iii)]**

7.

| | | | |
|---|---|---|---|
| a) | சம்மந்தமான உள் ஒழுங்குமுறை | i) | பழமையான பொருளாதாரம் |
| b) | முழுமையான ஈடுபாடு | ii) | கலப்புப் பொருளாதாரம் |
| c) | வரையறுக்கப்பட்ட பாத்திரம் கூட்டாட்சி | iii) | முதலாளித்துவம் |
| d) | கூட்டாட்சி அரசு | iv) | சமதர்ம பொருளாதாரம் |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
ஆ) a-(i) b-(ii) c-(iv) d-(iii)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)

**[விடை: அ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)]**

## III. கீழ்கண்டவற்றுள் சரியா, தவறா என தெரிவு செய் : 1 மதிப்பெண்

1. (i) சமத்துவ பொருளாதார அமைப்பில் போட்டியிடல் காணப்படுகிறது.
(ii) முதலாளித்துவ பொருளாதாரத்தில் இலாபமே முக்கிய நோக்கமாகும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி]**

2. (i) சமதர்ம பொருளாதார அமைப்பு முறையில், மைய திட்ட அதிகாரமே அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.
(ii) கலப்பு பொருளாதாரம் என்பது பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கலவையாகும்.

அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி
ஆ) இரண்டும் (i) மற்றும் (ii) தவறு
இ) (i) மட்டும் சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி]**

3. (i) நவீன நுண்ணினப் பொருளாதாரத்தின் தந்தை J. M. கீன்சு ஆவார்.
(ii) நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை J. M. கீன்சு ஆவார்.

அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி
ஆ) இரண்டும் (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி]**

4. (i) 'Makros' என்ற கிரேக்க மொழியில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது.
(ii) 'Makros' என்ற இலத்தினச் சொல்லில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது.

அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி
ஆ) இரண்டும் (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]**

5. (i) 'Makros' என்றால் பெரிய என்று பொருள்படும்.
(ii) 'Macro' என்றால் சிறிய என்று பொருள்படும்.

அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி
ஆ) இரண்டும் (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: அ) இரண்டும் (i) மற்றும் (ii) சரி]**



www.surabooks.com

**IV. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தியதை தேர்ந்தெடு : 1 மதிப்பெண்**

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | முதலாளித்துவம் | - | சமூக நலன் |
| ஆ) | சமத்துவம் | - | இலாப நோக்கம் |
| இ) | பழமையான பொருளாதாரம் | - | நவீன தொழில்நுட்பம் |
| ஈ) | கலப்புப் பொருளாதாரம் | - | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |

[விடை: ஈ) கலப்புப் பொருளாதாரம் - சமூக நலன் மற்றும் இலாப நோக்கம்]

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | இருதுறை மாதிரி | - | நிறுவனம் மற்றும் தொழில் |
| ஆ) | மூன்று துறை மாதிரி | - | நிறுவனம், இல்லங்கள், மற்றும் தொழிற்துறை |
| இ) | நான்கு துறை மாதிரி | - | நிறுவனம், இல்லங்கள் அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம் |
| ஈ) | இந்தியா | - | இருதுறை மாதிரியின் தோல்வி |

[விடை: இ) நான்கு துறை மாதிரி - நிறுவனம், இல்லங்கள், அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம்]

3.

| | | | |
|---|---|---|---|
| அ) | நுண்ணியல் | - | பெரிய |
| ஆ) | பேரியல் | - | சிறிய |
| இ) | பேரியல் பொருளதாரத்தின் தந்தை | - | ஆடம்ஸ்மித் |
| ஈ) | சமதர்ம பொருளாதாரத்தின் தந்தை | - | கார்ல் மார்க்ஸ் |

[விடை: ஈ) கார்ல் மார்க்ஸ்]

**V. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்**

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | வருமான ஏற்றத்தாழ்வு | - | முற்றுரிமை |
| ஆ) | நேர்மையான மற்றும் வாடகை கொள்கை | - | முதலாளித்துவம் |
| இ) | சமமான வாய்ப்பு | - | கலப்பு |
| ஈ) | அதிகபட்ச சமூக நன்மை | - | சமதர்மம் |

[விடை: இ) சமமான வாய்ப்பு - கலப்பு]

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | கலப்புப் பொருளாதாரம் | - | வளங்களை திறன்பட பயன்படுத்தல் |
| ஆ) | சமத்துவம் | - | சமூகநலன் |
| இ) | முதலாளித்துவ பொருளாதாரம் | - | இலாப நோக்கம் |
| ஈ) | பழமைப் பொருளாதாரம் | - | நவீன தொழில்நுட்பம் |

[விடை: ஈ) பழமைப் பொருளாதாரம் - நவீன தொழில்நுட்பம்]

3.

| | | | |
|---|---|---|---|
| அ) | பொருளியலின் இரு கிளைகள் | - | நுண்ணின மற்றும் பேரியல் பொருளாதாரம் |
| ஆ) | பொருளியலில் அறிவியலுக்கான முதல் நோபல் பரிசு | - | ரேக்னர் ஃபிரிஸ்ச் |
| இ) | நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம் ஸ்மித் |
| ஈ) | பேரியல் பொருளாதாரத்தின் தந்தை | - | J. M. கீன்சு |

[விடை: இ) நவீனபேரியல்பொருளாதாரத்தின் தந்தை - ஆடம் ஸ்மித்]



www.surabooks.com

4.

| | | | |
|---|---|---|---|
| அ) | பொதுவான பொருளாதார முறைகள் | - | சமதர்ம பொருளாதாரம் |
| ஆ) | பேரியல் பொருளாதாரத்தின் எல்லை | - | பணவீக்கம் |
| இ) | முதலாளித்துவ பொருளாதாரத்தின் தந்தை | - | ஆடம்ஸ்மித் |
| ஈ) | முதலாளித்துவம் | - | சமூக நலன் |

[விடை: ஈ) **முதலாளித்துவம் - சமூக நலன்**]

5.

| | | | |
|---|---|---|---|
| அ) | அங்காடிப் பொருளாதாரம் | - | முதலாளித்துவ பொருளாதாரம் |
| ஆ) | சமதர்ம பொருளாதாரத்தின் நன்மை | - | ஏற்றதாழ்வுகளை குறைத்தல் |
| இ) | கார்ல் மார்க்ஸ் | - | சமதர்ம பொருளாதாரத்தின் தந்தை |
| ஈ) | கலப்பு பொருளாதாரம் | - | U.S.A |

[விடை: ஈ) **கலப்பு பொருளாதாரம் - U.S.A**]

6.

| | | | |
|---|---|---|---|
| அ) | வருவாயின் வட்ட ஓட்டம் | - | இரண்டு |
| ஆ) | நான்கு துறைகள் | - | இல்லங்கள், நிறுவனம், அரசு மற்றும் அயல்நாட்டு வாணிபம் |
| இ) | சமதர்மம் | - | மத்திய திட்டக்குழு |
| ஈ) | ஒட்டுமொத்த சுதந்திரம் | - | முதலாளித்துவம் |

[விடை: அ) **வருவாயின் வட்ட ஓட்டம் - இரண்டு**]

7.

| | | | |
|---|---|---|---|
| அ) | செயல்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் பணிகள் | - | உற்பத்தி மற்றும் நுகர்வு |
| ஆ) | பொதுவான பொருளாதார முறைகள் | - | மூன்று |
| இ) | கலப்புப் பொருளாதாரம் | - | இந்தியா |
| ஈ) | முதலாளித்துவ பொருளாதாரம் | - | தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து செயல்படுதல் |

[விடை: ஈ) **முதலாளித்துவ பொருளாதாரம்- தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து செயல்படுதல்**]

## VI. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க. : 1 மதிப்பெண்

1. **கூற்று (A) : பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகும்.**

**காரணம் (R) : இந்நடவடிக்கையின் தலையாய நோக்கம் வளர்ச்சியை அடைவதாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) **A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

2. **கூற்று (A) : முதலாளித்துவ பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் இலாபம் பெறுவதாகும்.**

**காரணம் (R) : விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) **A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

3. **கூற்று (A) : சமத்துவ பொருளாதாரத்தில் பெரும்பாலான தொழில் உரிமம் மற்றும் கட்டுபடுத்துவதை அரசே தீர்மானிக்கின்றது.**

**காரணம் (R) : பொது நலமே அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) **A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



4. **கூற்று (A) : கலப்பு பொருளாதாரம் என்பது தனியார் மற்றும் பொதுத் துறையின் கலவையாகும்.**

**காரணம் (R) : முதலாளித்துவம் மற்றும் சமத்துவ பொருளாதார அமைப்பு முறைகளின் தீமைகளை களைய இம்முறை உதவும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) **A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

5. **கூற்று (A) : ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது. அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குகிறது.**

**காரணம் (R) : வருவாயின் வட்ட ஓட்டம் ஆய்வானது தேசிய கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) **A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

## VII. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்

1. **பேரியல் பொருளாதாரத்தின் உள்ளடக்கம்**

அ) முதலீடு மற்றும் சேமிப்பு

ஆ) பணவீக்கம் மற்றும் வாணிபச் சுழற்சி

இ) அயல்நாட்டு வாணிபம்

ஈ) தனித் தேவை மற்றும் அளிப்பு

[விடை: ஈ) **தனித் தேவை மற்றும் அளிப்பு**]

2. **பொதுவான பொருளாதார முறைகள்**

அ) இந்தியப் பொருளாதாரம்

ஆ) முதலாளித்துவ பொருளாதாரம்

இ) சமத்துவ பொருளாதாரம்

ஈ) கலப்புப் பொருளாதாரம்

[விடை: அ) **இந்தியப் பொருளாதாரம்**]

3. **முதலாளித்துவ பொருளாதாரத்தின் இயல்புகள்**

அ) தேர்ந்தெடுப்பதில் சுதந்திரம்

ஆ) இலாப நோக்கம்

இ) சமூக நலன்

ஈ) விலைக் கருவி [விடை: இ) **சமூக நலன்**]

4. **சமத்துவ பொருளாதாரத்தின் தீமைகள்**

அ) சிவப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்

ஆ) ஏற்றத்தாழ்வு குறைத்தல்

இ) ஊக்கமின்மை

ஈ) தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு

[விடை: ஆ) **ஏற்றத்தாழ்வு குறைத்தல்**]

## பகுதி – ஆ

### கீழ்க்கண்டவற்றுக்கு ஓரிரு வார்த்தையில் விடையளி. 2 மதிப்பெண்கள்

1. **மூன்று பொருளாதார முறைகளின் பெயர்களை கூறு.**

விடை. (i) முதலாளித்துவ பொருளாதார அமைப்பு (முதலாளித்துவம்)

(ii) சமத்துவ பொருளாதார அமைப்பு (சமத்துவம்) மற்றும்

(iii) கலப்புப் பொருளாதார அமைப்பு கலப்புத்துவம்.

2. **உலகத்துவம் என்றால் என்ன?**

விடை. பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர்நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை மேன்பிரட்டிஸ்டீகர் 2002ம் ஆண்டு உருவாக்கினார்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**3. சமத்துவ பொருளாதார அமைப்பின் தீமைகளை எழுதுக.**

விடை. (i) சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம்.
(ii) ஊக்கமில்லாமை (Absence of Incentive).
(iii) தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு.
(iv) அதிகாரம் குவிதல்.

**4. சமத்துவப் பொருளாதார அமைப்பின் பொருள் தருக.**

விடை. (i) கார்ல் மார்க்ஸ் சமத்துவத்தின் தந்தை ஆவார்.
(ii) சமத்துவம் என்பது மொத்த திட்டமிடுதல், பொதுவமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும்.

**5. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?**

விடை. (i) கலப்புப் பொருளாதார அமைப்பு முறையில், தனியார் மற்றும் பொதுத்துறைகள் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காக பணியாற்றுவது ஆகும்.
(ii) முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகியற்றின் கலவையாகும்.

**6. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகள் யாவை?**

விடை. (i) அதிவேக பொருளாதார வளர்ச்சி.
(ii) சமமான பொருளாதார வளர்ச்சி.
(iii) வளங்களை சரியாக பயன்படுத்துதல்.
(iv) பொருளாதார சமத்துவம்.
(v) சமூகத்துக்கு சிறப்பு நன்மைகள்.

**7. கலப்புப் பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?**

விடை. (i) இந்தியா
(ii) இங்கிலாந்து
(iii) பிரான்ஸ்
(iv) பிரேசில் ஆகிய நாடுகள் கலப்பு பொருளாதார நாடுகளுக்கு உதாரணம் ஆகும்.

**8. முதலாளித்துவ பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?**

விடை. U.S.A, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் முதலாளித்துவ பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகளாகும்.

**9. சமத்துவ பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?**

விடை. சமத்துவ பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகளாவன.
(i) ரஷ்யா
(ii) சீனா
(iii) வியட்நாம்
(iv) போலாந்து மற்றும் க்யூபா ஆகியவை சமத்துவ பொருளாதார அமைப்புக்கு உதாரணமாகும்.

**10. இருதுறை பொருளாதாரத்தின் வருவாய் வட்ட ஓட்ட வரைப்படம் வரைக?**

விடை.




**11. நான்கு துறை பொருளதார மாதிரியின் சமன்பாடு யாவை?**

விடை. Y = C + 1 + G + (X – M)
Y = இல்லங்கள்
I = நிறுவனங்கள்
G = அரசு
(X – M) = வெளியுறவுத்துறை

**12. மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்ட மாதிரிகளின் பெயர்களை கூறுக.**

விடை. (i) இரண்டு துறை மாதிரி
(ii) மூன்று துறை மாதிரி
(iii) நான்கு துறை மாதிரி

**13. பேரியல் பொருளாதாரத்தின் பொருள் தருக.**

விடை. (i) கிரேக்க மொழியில் உள்ள Makros என்ற சொல்லில் இருந்து Macro என்ற சொல் பெறப்பட்டது.




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(ii) அதன் பொருள் பெரிய என்பது ஆகும்.

(iii) பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் பிடிப்பது ஆகும்.

(iv) பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலைவாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது. பேரியல் பொருளாதாரத்தை வருவாய் கோட்பாடு எனபவும் அழைப்பார்.

## பகுதி - இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக. 3 மதிப்பெண்கள்**

**1. முதலாளித்துவத்தின் நன்மைகள் யாவை?**

விடை. (i) தானாக இயங்குதல்

(ii) வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்

(iii) கடின உழைப்பிற்கு வெகுமதி

(iv) பொருளாதார முன்னேற்றம்

(v) நுகர்வோர் இறையாண்மை

(vi) மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல்

(vii) புதிய தொழில் நுட்ப முன்னேற்றம்

**2. முதலாளித்துவத்தின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை விளக்குக.**

விடை. (i) **வருமானம் மற்றும் செல்வச் செறிவு :**

✦ முதலாளித்துவத்தில் வருமானம் மற்றும் செல்வம் சிலரது கைகளில் மட்டும் குவிகிறது.

✦ எனவே வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.

(ii) **வளங்கள் வீணாக்கப்படுதல் :**

✦ போட்டி விளம்பரங்களினாலும் பொருட்களின் பிரதிகளினாலும் வளங்கள் அதிக அளவில் வீணாக்கப்படுகின்றன.

**3. மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்ட வரைபடம் வரைக.**

விடை. மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்.



This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**4. சமதர்ம பொருளாதாரத்தின் ஏதேனும் மூன்று நன்மைகளை விளக்குக.**

விடை. (i) **ஏற்றத்தாழ்வுகளில் குறைவு :**

- ✦ எந்த நபராலும் தனியார் சொத்துக்களை உரிமம் கொண்டு மற்றும் பயன்படுத்துவதன் மூலம் மற்றவர்களை சுரண்ட அனுமதி இல்லை.

(ii) **வாணிக சூழலுக்கு முடிவு :**

- ✦ பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பகிர்வை திட்ட அதிகாரமே முழுகட்டுக்குள் வைத்துக் கொள்ளும் அதனால், தவிர்க்க முடியும்.

(iii) **வகுப்பு சண்டைகள் இல்லாமை :**

- ✦ ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால், பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை
- ✦ சமூகம் சுமுகமான சூழலில் செயல்படும்.

**5. கலப்புப் பொருளாதாரத்தின் தீமைகளை விளக்குக.**

விடை. (i) **ஒருங்கிணைப்பு இல்லாமை :**

- ✦ கலப்புத்துவத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததாகும்.

(ii) **திறமையின்மை :**

- ✦ மந்தமான அதிகாரமுறை, சிவப்பு நாடாமுறை, ஊக்கமின்மை ஆகியவற்றால் பொதுத்துறை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறனற்றவைகளாகவே இருக்கின்றன.

(iii) **விரிவடையும் சமத்துவமின்மை :**

- ✦ வளங்களின் உரிமை, பரம்பரைச் சட்டங்கள், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர் ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

**6. பேரியல் பொருளாதாரத்தின் குறைகளை விளக்குக.**

விடை. **பேரியல் பொருளாதாரத்தின் குறைகள் :**

(i) பொளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.

(ii) தனிப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் ஓரினத் தன்மை வாய்ந்தது.

(iii) தொகுத்தலில் தவறுகள் காணப்படும்.

(iv) பொளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கப்படுகின்றன.

**7. சமதர்ம பொருளாதாரத்தின் இயல்புகளை விளக்குக.**

விடை. (i) **மைய திட்டமிடல் :**

- ✦ ஒரு சமத்துவ பொருளதார அமைப்பில், திட்டமிடல் என்பது ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.
- ✦ இந்த அமைப்பு முறையில், மைய திட்ட அதிகார முடிவுகளை அரசே மேற்கொள்ளும்.

(ii) **போட்டி இல்லாமை :**

- ✦ சமத்துவ பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும்.
- ✦ பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது.

(iii) **விலை இயங்கு முறை இல்லாமை :**

- ✦ மையத்திட்ட அதிகாரத்தின் கட்டுபாடு மற்றும் ஒழுங்குப்படுத்துதலின் அடிப்படையில் விலை நிர்ணய முறை காணப்படும்.

(iv) **வாய்ப்புகளில் சமத்துவம் :**

- ✦ இலவச மருத்துவம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவை சமத்துவ பொருளாதாரத்தில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படும்.

**8. செயல்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்தின் பணிகள் யாவை?**

விடை.




பேரியல் பொருளாதாரம்

www.surabooks.com

**9. மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாய் வட்ட ஓட்டம் பற்றி விளக்குக.**

விடை. (i) **இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம் :**

- ✦ இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டுமே காணப்படும்.

$$Y = C + I$$

(ii) **மூன்று துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம் :**

- ✦ மூன்று துறை மாதிரியில், தேசிய வருமானம் என்பது நுகர்வுச் செலவு, முதலீடு செலவு மற்றும் அரசின் செலவு ஆகியவற்றை கூட்டுதல் ஆகும்.

$$Y = C + I + G$$

(iii) **நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாய் வட்ட ஓட்டம் :**

- ✦ நான்கு துறை பொருளதாரத்தில், இல்லம், நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறுத்துறையும் இணைக்கப்படுகிறது. நிஜவாழ்க்கையில், நான்கு துறை பொருளாதாரம் காணப்டுகிறது.

$$Y = C + I + G + (X - M)$$

## பகுதி – ஈ

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி : 5 மதிப்பெண்கள்**

**1. நான்கு துறை பொருளாதாரத்தில் வருவாயின் வட்ட ஓட்டத்தை வரைபடம் கொண்டு விளக்குக.**

விடை.
- ✦ நிஜவாழ்க்கையில் நான்கு துறை வருவாய் வட்ட ஓட்டம் காணப்படுகிறது.
- ✦ நான்கு துறை பொருளாதாரத்தில், இல்லம்,நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது.
- ✦ இந்த மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.

  (i) இல்லங்கள் (Household) (ii) நிறுவனங்கள் (Firms)
  (iii) அரசு (Government) (iv) வெளியுறவுத் துறை (External Sector)

- ✦ வெளியுறவு துறையில் பொருளாதாரத்தில், ஒட்டு மொத்த செலவானது, உள்நாட்டு செலவுகள் ஆகும்.
- ✦ (C+I+G) மற்றும் நிகர ஏற்றுமதி (X–M) ஐ உள்ளடக்கும்.
- ✦ நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்ட வரைபடம்.




- ✦ Y = C + I + G + (X – M) நான்கு துறை பொருளாதாரத்தின் உள்ளடக்கம் ஆகும்.

**2. சமதர்ம பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.**

விடை. **சமதர்ம பொருளாதாரத்தின் நன்மைகள் :**

**(i) ஏற்றத்தாழ்வுகளில் குறை :**

- எந்த நபராலும் தனியார் சொத்துக்களை உரிமம் கொண்டு மற்றும் பயன்படுத்துவதன் மூலம் மற்றவர்களை சுரண்ட அனுமதி இல்லை.

**(ii) வளங்கள் அறிவார்ந்த முறையில் ஒதுக்கீடு :**

- மைய திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- வளங்கள் விரயமாவது குறைக்கப்படுவதுடன் முன்திட்ட அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**(iii) வகுப்பு சண்டைகள் இல்லாமை :**

- ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால், பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை.
- சமூகம் சமூகமான சூழலில் செயல்படும்.

**(iv) வாணிக சூழலுக்கு முடிவு :**

- பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பகிர்வை, திட்ட அதிகாரம் போன்றவற்றை முழு கட்டுக்குள் வைத்துக் கொள்ளும்.

**(v) சமூக நலன் முன்னேற்றம் :**

- சுரண்டல் இல்லாமை, மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகிறது.
- ஏற்றத்தாழ்வுமிக்க வாணிகச் சூழல் தவிர்த்தல் மற்றும் உற்பத்தி திறன் அதிகரித்தல் ஆகியவை சமூக நலன் வளர உதவுகிறது.

**3. கலப்பு பொருளதாரத்தின் தீமைகளை விளக்குக.**

விடை. **கலப்பு பொருளாதாரத்தின் தீமைகள் :**

**(i) ஒருங்கிணைப்பு இல்லாமை :**

- கலப்புத்துவத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததாகும்.
- தனியாரும் மற்றும் பொதுத்துறைகளும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயல்படுவதால் ஒருங்கிணைப்பு தொடர்பான பிரச்சனைகள் உருவாகின்றன.

**(ii) போட்டி மனப்பான்மை :**

- அரசு மற்றும் தனியார் துறைகள் சமூகத்தின் நலனுக்காக இணைந்து செயலாற்றும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறையில் இவ்விரண்டு துறைகளும் அவற்றின் நடவடிக்கைகளில் போட்டித் தன்மையுடனேயே நடந்து கொள்கின்றன.

**(iii) திறமையின்மை :**

- மந்தமான அதிகாரமுறை, சிவப்பு நாடாமுறை, ஊக்கமின்மை ஆகியவற்றால் பொதுத்துறை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறனற்றவைகளாகவே இருக்கின்றன.

**(iv) தேசியமயமாக்கல் பற்றிய பயன் :**

- கலப்பு பொருளாதார அமைப்பில், தேசியமயமாக்குதல் பற்றிய பயம் தனியார் துறைகளில் காணப்படுவதால், தனியார் தொழில் முனைவோர்கள் அவர்களின் வாணிப நடவடிக்கைகளையும், புத்தாக்க முயற்சிகளையும் சுருக்கிவிடுகின்றனர்.

**(v) விரிவடையும் சமத்துவமின்மை :**

- வளங்களின் உரிமை, பரம்பரைச் சட்டங்கள், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

**4. கலப்பு பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.**

விடை. **கலப்பு பொருளாதாரத்தின் நன்மைகள் :**

**(i) அதிவேகப் பொருளாதார வளர்ச்சி :**

- கலப்புப் பொருளாதாரத்தின் சிறந்த நன்மை அதிவேகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும்.
- பொதுத் தேவைகளும், தனியாரின் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன.

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(ii) சமமான பொருளாதார வளர்ச்சி :**

- பொருளாதாரத்தின் சமநிலை வளர்ச்சியை கலப்புத்துவம் ஊக்குவிக்கிறது.
- வேளாண்மை மற்றும் தொழில், நுகர்வுப் பண்டங்கள் மற்றும் மூலதனப் பண்ட

ங்கள், கிராமம் மற்றும் நகரம் ஆகியவற்றிடையே சமமான வளர்ச்சியை ஊக்கப்படுத்தும்

**(iii) வளங்களைச் சரியாக பயன்படுத்துதல் :**

- ஒரு கலப்புப் பொருளாதாரத்தில், வளங்களின் சரியான பயன்பாட்டை அரசு உறுதிப்படுத்தலாம்.
- அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை நேரடியாகக் கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும்.

**(iv) பொருளாதாரச் சமத்துவம் :**

- அரசு வருவாய் வரியை விதிப்பதற்கு வளர்வீத வரிமுறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தை கொண்டு வருகிறது.

**(v) சமூகத்துக்கு சிறப்பு நன்மைகள் :**

- குறைந்தபட்சக் கூலிகள் மற்றும் பகிர்வு முறைச் சட்டங்கள், நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துதல், மற்றும் சமூகநலன் போன்றவற்றின் மூலம் தொழிலாளர்கள் நலிவடைந்த பிரிவினரின் ஆர்வங்களை அரசு பாதுகாக்கும்.

☆☆☆



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

அத்தியாயம் 2

# தேசிய வருவாய்

## பொருளடக்கம்


2.1 அறிமுகம்
2.2 தேசிய வருவாயின் பொருள்
2.3 இலக்கணம்
2.4 தேசிய வருவாயின் அடிப்படை கருத்துக்கள்
2.4.1 மொத்த உள்நாட்டு உற்பத்தி
2.4.2 மொத்த தேசிய உற்பத்த
2.4.3 நிகர தேசிய உற்பத்தி
2.4.4 காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி
2.4.5 தனிநபர் வருமானம்
2.4.6 செலவிடக்கூடிய வருமானம்
2.4.7 தலா வருமானம்
2.4.8 உண்மை வருமானம்
2.4.9 G.D.P. குறைப்பான்
2.5 தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம்
2.5.1 உற்பத்தி முறை
2.5.2 வருமானம் முறை
2.5.3 செலவி முறை
2.6 தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம்
2.7 தேசிய வருவாய்
2.7.1 மாற்றுச் செலுத்தல்கள்
2.7.2 தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல்
2.7.3 பணம் செலுத்தப்படாத சேவைகள்
2.7.4 சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்
2.7.5 சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்
2.7.6 மூலதன இலாபம்
2.7.7 புள்ளி விவர சிக்கல்
2.8 தேசிய வருவாய் மற்றும் சமூக கணக்கிடுதல்
2.8.1 சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள்
2.8.2 தேசிய வருவாயும் பொது நலனும்
2.8.3 தேசிய வருவாய் மற்றும் நாட்டின் செல்வம் அரிக்கப்படுதல்
2.8.4 US $ அடிப்படையில் தேசிய வருமானம்
2.8.5 சமூக மற்றும் சுற்றுச்சூழல் செலவு


www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

அத்தியாயம் 2

## கருத்துப் படம்





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **தேசிய வருவாயின் பொருள்** | : | தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும். |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | : | ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும். |
| **மொத்த தேசிய உற்பத்தி (GNP)** | : | மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும். |
| **நிகர தேசிய உற்பத்தி (NNP at Market Prices)** | : | நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். |
| **காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at Factor Cost)** | : | NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். |
| **தனிநபர் வருமானம் (Personal Income)** | : | தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்க பெறும் மொத்த வருமானம் ஆகும். |
| **செலவிடக்கூடிய வருமானம் (Disposable Income)** | : | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளைக் கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம் ஆகும். |
| **தலா வருமானம் (Per capita Income)** | : | தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். |
| **உண்மை வருமானம் (Real Income)** | : | பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. |
| **GDP குறைப்பான் (GDP Deflator)** | : | GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும். |
| **உற்பத்தி முறை (Product Method)** | : | உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. |
| **வருமான முறை (Income Method)** | : | வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. |
| **செலவு முறை (Expenditure Method)** | : | ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. |
| **சமூகக் கணக்கீடு (Social Accounts)** | : | பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஏற்படுகிற சமூகச் செலவுகளின் அடிப்படையில் தேசிய வருமானம் கணக்கிடப்படும். |
| **பணம் கொடுக்கப்படாத சேவைகள் (Unpaid Services)** | : | பணம் பெறாமல் அளிக்கக்கூடிய பொருளாதார பலன்கொண்டிருக்கும் சேவைகள் ஆகும். |
| **மூலதனத் துறை (Capital Sector)** | : | சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது மூலதனத்துறை ஆகும். |
| **மாற்று செலுத்துதல் (Transfer Payments)** | : | வேலையற்றோருக்கு அரசு அளிக்கும் உதவித்தொகை, வயோதிகர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போன்றவை. |



www.surabooks.com

# இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| **சாமுவேல்சனின் தேசிய வருவாய் இலக்கணம்** | : | "பெரிய பிரச்சனைகளான வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் மற்றும் வளர்ச்சி" ஆகியவற்றை சமாளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தவிர்க்க முடியாத தயாரிப்பே தேசிய வருவாய் என்று சாமுவேல்சன் கூறுகிறார். |
| **ஆல்ஃபிரட் மார்ஷலின் தேசிய வருவாய் இலக்கணம்** | : | "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துவதே, அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத்தொகை" என்று ஆல்ஃபிரட் மார்ஷல் கூறுகிறார். |
| **சைமன் குஸ்நட்ஸின் நாட்டு வருமான இலக்கணம்** | : | சைமன் குஸ்நட்ஸ் கூற்றுப்படி "ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர வெளியீடாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்கு செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது". |
| **இர்விங் பிஷ்ஷரின் நாட்டு வருமான இலக்கணம்** | : | "பண்டங்களிலிருந்தோ அல்லது சுற்றுப்புறச் சூழலிலிருந்தோ கடைசி நுகர்வோருக்கு கிடைக்கும் பணிகள் நாட்டு வருமான ஈவு அல்லது நாட்டு வருமானம் எனப்படும்". |
| **தலா வருமானத்தின் இலக்கணம்** | : | "தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும் உண்மையான தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் பொதுவான வாழ்க்கை தரம் உயர்ந்ததாக கருதப்படும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிலவற்றை சரிசெய்வதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது". |
| **GDP குறைப்பானின் (GDP Deflator) இலக்கணம்** | : | "GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும்". |

# சூத்திரங்கள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி – செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடும் சூத்திரம்.

  GDP = C + I + G + (X–M)

- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = GDP – தேய்மானம்
- சந்தை விலையில் (GNP) = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.
- நிகர தேசிய உற்பத்தி (NNP)

  NNP = GNP – தேய்மான கழிவு

- காரணி செலவில் (NNP)

  காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுக வரி + மானியம்

- தனிநபர் வருமானம் :

  தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் – சமூக பாதுகாப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம் + மாற்று செலுத்துதல்கள்

www.surabooks.com

✦ செலவிடக்கூடிய வருமானம் :

| |
|---|
| செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முகவரிகள் |

✦ தலா வருமானம் :

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

✦ நிலையான விலையில் தேசிய வருமானம் :

நிலையான விலையில் தேசிய வருமானம் = நடப்பு விலையில் தேசிய வருவாய் $\div P_1/P_0$

✦ GDP குறைப்பான் (GDP Deflator) :

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

✦ தேசிய வருவாயை அளவிடும் முறைகள் :

| |
|---|
| உற்பத்தி = வருமானம் = செலவு |

✦ வருமான முறை :

$$Y = w + r + i + \pi + (R - P)$$

✦ செலவுமுறை (Expenditure Method) :

$$GNP = C + I + G + (X - M)$$

✦ சந்தை விலை (MP) :

MP = காரணி செலவு (FC) – உதவித்தொகை

✦ காரணி செலவு (FC) :

| |
|---|
| காரணி செலவு = சந்தைவிலை – மறைமுகவரி + உதவித்தொகைகள் |

✦ உற்பத்தியின் மதிப்பு :

| |
|---|
| உற்பத்தியின் மதிப்பு = விற்பனை + இருப்பில் மாற்றம் |

✦ இருப்பில் மாற்றம் :

| |
|---|
| இருப்பில் மாற்றம் = முடிவு இருப்பு (Closing Stock) – தொடக்க இருப்பு (Opening Stock) |



www.surabooks.com

# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

1. **உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP**
அ) தேசிய வருவாய்
ஆ) உள்நாட்டு வருமானம்
இ) தலை வீத வருமானம்
ஈ) சம்பளம்
[விடை: அ) தேசிய வருவாய்]

2. **முதன்மைதுறை என்பது _______**
அ) தொழில் ஆ) வியாபாரம்
இ) விவசாயம் ஈ) கட்டடம் கட்டுதல்
[விடை: இ) விவசாயம்]

3. **எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) நான்கு
[விடை: ஆ) மூன்று]

4. **எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?**
அ) வருவாய் ஆ) வரி
இ) செலவு ஈ) வருமானம்
[விடை: ஈ) வருமானம்]

5. **கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?**
அ) செலவிடக்கூடிய வருமானம்
ஆ) தனிநபர் வருமானம்
இ) NNP
ஈ) GNP
[விடை: ஈ) GNP]

6. **_______ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.**
அ) கட்டடத்துறை ஆ) விவசாயத்துறை
இ) பணித்துறை ஈ) வங்கித்துறை
[விடை: அ) கட்டடத்துறை]

7. **மூன்றாம் துறை _______ எனவும் அழைக்கப்படுகிறது.**
அ) பணிகள் ஆ) வருமானம்
இ) தொழில் ஈ) உற்பத்தி
[விடை: அ) பணிகள்]

8. **ஒரு நாட்டின் _______ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.**
அ) தொழில் ஆ) விவசாயம்
இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு
[விடை: இ) பொருளாதாரம்]

9. **_______ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.**
அ) உற்பத்தி
ஆ) நாட்டின் மக்கள் தொகை
இ) செலவு
ஈ) GNP
[விடை: ஆ) நாட்டின் மக்கள் தொகை]

10. **GNP = _______ + வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.**
அ) NNP
ஆ) NDP
இ) GDP
ஈ) தனிநபர் வருமானம்
[விடை: இ) GDP]

11. **NNP என்பது _______.**
அ) Net National Product
ஆ) National Net Product
இ) National Net Provident
ஈ) Net National Provident
[விடை: அ) Net National Product]

12. **மொத்த மதிப்பிலிருந்து _______ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?**
அ) வருமானம்
ஆ) தேய்மானம்
இ) செலவு
ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு
[விடை: ஆ) தேய்மானம்]

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**13.** இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ______.

அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31

ஆ) மார்ச் 1 முதல் ஏப்ரல் 30

இ) மார்ச் 1 முதல் மார்ச் 16

ஈ) ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

[விடை: அ) ஏப்ரல் 1 முதல் மார்ச் 31]

**14.** NNP யிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ______.

அ) மொத்த தேசிய உற்பத்தி

ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) நிகர தேசிய உற்பத்தி

ஈ) தனிநபர் வருமானம்

[விடை: இ) நிகர தேசிய உற்பத்தி]

**15.** உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு ______ என அழைக்கப்படுகிறது.

அ) காரணி செலவில் NNP

ஆ) சந்தை விலையில் NNP

இ) காரணி செலவில் GNP

ஈ) தலைவீத வருமானம்

[விடை: அ) காரணி செலவில் NNP]

**16.** ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ______

அ) தனிநபர் வருமானம்

ஆ) தலைவீத வருமானம்

இ) பணவீக்க வீதம்

ஈ) செலவிடக்கூடிய வருமானம்

[விடை: ஆ) தலைவீத வருமானம்]

**17.** பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ______ என அழைக்கப்படுகிறது.

அ) பணவீக்க வீதம்

ஆ) செலவிடக்கூடிய வருமானம்

இ) GNP

ஈ) உண்மை தேசிய வருவாய்

[விடை: ஈ) உண்மை தேசிய வருவாய்]

**18.** கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட (Flow) கருத்துரு?

அ) சட்டைகளின் எண்ணிக்கை

ஆ) மொத்த சொத்து

இ) மாத வருமானம்

ஈ) பண அளிப்பு

[விடை: இ) மாத வருமானம்]

**19.** PQLI என்பது ______ ன் குறியீடு ஆகும்.

அ) பொருளாதார வளர்ச்சி

ஆ) பொருளாதார நலன்

இ) பொருளாதார முன்னேற்றம்

ஈ) பொருளாதார மேம்பாடு

[விடை: ஆ) பொருளாதார நலன்]

**20.** மிக அதிக அளவிலான தேசிய வருவாய் ______ லிருந்து வருகிறது.

அ) தனியார் துறை ஆ) உள்துறை

இ) பொதுத்துறை ஈ) எதுவும் இல்லை

[விடை: அ) தனியார் துறை]

## பகுதி – ஆ

## கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும் :

**21.** தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.

விடை. "ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுகின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத் தொகை ஆகும். என்று ஆல்ஃபிரட் மார்ஷல் கூறுகிறார்".

(அல்லது)

"ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பிலிருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர வெளியீடாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்கு செல்கின்றன. அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது" என்று சைமன் குஸ்நட்ஸ் கூறுகிறார்.

**22.** GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.

விடை.

| | | |
|---|---|---|
| மொத்த நாட்டு உற்பத்தி (GNP) சந்தை விலையில் | = | சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் |





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

விடை.

| வ. எண் | NNP நிகர தேசிய உற்பத்தி | NNP நிகர உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|
| 1. | நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். | நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். |
| 2. | GNP யிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்தபின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும். | தேய்மானத்தின் மதிப்பை GDP யிலிருந்து கழித்துவிட்டால் கிடைப்பது NDP ஆகும். |
| 3. | NNP = GNP – தேய்மான கழிவு | நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP – தேய்மானம். |

**24. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பினை எழுது.**

விடை.

| வ. எண் | GNP | NDP |
|---|---|---|
| 1. | மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும். | நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். |
| 2. | நிகர வெளிநாட்டு வருமானமும் (நிகர ஏற்றுமதி சேர்க்கப்படும். | GNP யிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும். |
| 3. | சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம். | NNP = GDP – தேய்மானக் கழிவு |

**25. தனிநபர் வருமானம் என்றால் என்ன?**

விடை. (i) தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆகும்.

(ii) வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம்.

(iii) இவை அனைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனிநபர் வருமானம் ஆகும்.

**26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

விடை. GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும். இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும். கொடுக்கப்பட்ட ஆண்டில் பணமதிப்பு அடிப்படையில் கணக்கிடப்பட்ட GDP யை உண்மை GDP யால் வகுத்து, 100ஆல் பெருக்கினால் GDP குறைப்பானை கணக்கிடலாம்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

**27. தேசிய வருவாய் கணக்கீட்டில் "சுய நுகர்வு" எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?**

விடை. (i) **சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(ii) உற்பத்தி முறையில் தேசிய வருவாய் கணக்கிடுதல் என்பது நடப்பு சந்தை விலையில் முடிவடைந்த பொருள்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும்.

(iii) பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணை பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை தேசிய வருவாயை கணக்கிடுகின்றனர்.

## பகுதி - இ

### கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும் :

**28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.**

விடை. (i) தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

(ii) தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

**29. தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

விடை.

| வ. எண் | தனிநபர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|---|
| 1. | தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. |
| 2. | வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனி நபர் வருமானம் ஆகும். | இந்த வருமானம்தான் தனிநபர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும். |
| 3. | **சூத்திரம் :** தனிநபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்தல்கள். | **சூத்திரம் :** செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள். |

**30. காரணி செலவில் NNP - விவரி.**

விடை. (i) NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும்.

(ii) காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்தல்கள் ஆகும்.

(iii) காரணி செலவில் நிகர தேசிய வருவாயை பெறுவதற்கு, சந்தை விலையில் NNP யின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியை கழிக்க வேண்டும். மேலும் மானியங்களை கூட்ட வேண்டும்.

(iv) காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்.

**31. செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக.**

விடை. **செலவு முறை :**

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(i) தனிநபர் சுய நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

(ii) மொத்த செலவும் கீழ்க்கண்ட முறையில் சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

GNP = C + I + G + (X – M)

C - தனியார் நுகர்வுச் செலவு

I - தனியார் முதலீட்டு செலவு

G - அரசின் கொள்முதல் செலவு

X – M - நிகர ஏற்றுமதி

**32. தேசிய வருவாய் கணக்கிடுதலில் "இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு"?**

விடை. **இருமுறை கணக்கெடுப்பு :**

(i) ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.

(ii) இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

(iii) உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே பஞ்சு, நூல், துணி மற்றும் ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என பிழைக்கு வழிவகுக்கும்.

**33. தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

விடை. **தேசிய வருவாயும் பொது நலனும் :**

(i) ஒரு நாட்டின் வளர்ச்சியும், பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசியவருவாயைப் பொறுத்தே அமைகிறது.

(ii) GDP யில் தலைவீத வருமானம் மற்றும் அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

(iii) அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

**34. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.**

விடை. **தேசிய வருவாயின் பயன்கள் :**

(i) ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் (அ) உற்பத்தி செயல்திறனை தேசிய வருவாய் விளக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வியாபாரிகள் மற்றும் IMF, உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரத்தை பயன்படுத்துகின்றன.

(ii) நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்த புள்ளி விவரங்களை பகுத்தாய்வு செய்கின்றன.

(iii) மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதா என்பதை கண்டறிய தேசிய வருவாய் உதவுகிறது.

(iv) மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும் தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது.

(v) ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவை கணக்கிட தேசிய வருவாய் பயன்படுத்தப் படுகின்றது.

## பகுதி – ஈ

## கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

**35. தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.**

விடை. **தேசிய வருவாயின் முக்கியத்துவம் :**

(i) தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.

(ii) தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொது நிதிக் கொள்கைகளை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல கடைபிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.

(iii) திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(iv) குறுகிய கால மற்றும் நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க தேசிய வருவாய் கணக்கீடு பயன்படுகிறது.

(v) துறைவாரியான பொருளாதார விவரங்களையும் ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

(vi) தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.

(vii) ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்துகொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.

(viii) பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்பு கணக்கு பற்றாக்குறை – GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை – GDP விகிதம், கடன் – GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.

**36. தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.**

விடை. ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு அதனை பணமதிப்பில் மதிப்பிட வேண்டும்.

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை உற்பத்தி முறை, வருவாய் முறை மற்றும் செலவு முறை இவற்றை;

(i) உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் முறை.

(ii) வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும்

(iii) செலவு முறை

✦ இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி, வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

✦ உற்பத்தி = வருமானம் = செலவு

**(i) உற்பத்தி முறை :**

✦ உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

✦ இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.

✦ ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.

**இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.**

✦ 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பெயரின் அதன் ஒரு ஹெக்டேருக்கான சராசரி உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

✦ ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

✦ **முன்னெச்சரிக்கைகள் :**

ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது.

✦ **உதாரணம் :** ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி மற்றும் ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என்ற பிழைக்கு வழிவகுக்கிறது.

**(ii) வருமான முறை :**

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.

**கணக்கிடுவதன் நிலைகள் :**

✦ மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

✦ காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.

✦ $Y = w + r + i + \pi + (R - P)$

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(iii) செலவு முறை :**

- இம்முறையில் ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- தனிநபர் சுய நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- $GNP = C + I + G + (X - M)$

**37. தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?**

விடை. (i) தேசிய வருவாய் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்பு இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

(ii) இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்டமாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு. எனவே ஒரு சரியான தேசிய வருமான மதிப்பீடு தருவதில் சிரமங்கள் இருக்கின்றன.

(iii) சில சிரமங்கள் கீழே வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

**சிரமங்கள் :**

(i) மாற்றுச் செலுத்துதல்கள்

(ii) தேய்மானங்கள் மதிப்பீடு செய்வதில் சிரமம்

(iii) பணம் செலுத்தப்படாத சேவைகள்

(iv) சட்ட விரோத நடவடிக்கைகளால் கிடைக்கும் வருமானம்

(v) சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்

(vi) மூலதன இலாபம்

(vii) புள்ளி விவரச் சிக்கல்கள்

**(i) மாற்றுச் செலுத்துதல்கள் :**

ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்றவற்றை அரசு அளிக்கிறது. இவைகள் அரசின் செலவுகள் ஆனால் இவைகளை தேசிய வருவாயில் சேர்ப்பதில்லை.

**(ii) தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல் :**

தேய்மானம் கொடுப்பளவு, விபத்து, இழப்பு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. இவைகளை அதிக கவனத்துடன சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**(iii) பணம் செலுத்தப்படாத சேவைகள் :**

- இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர்.
- உணவு தயாரித்தல், தையல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற வேலைகளையும் எவ்வித பண வருமானமும் இன்றியும், நட்பு, பாசம், அன்பு, மரியாதை போன்ற பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

**(iv) சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் :**

- சூதாட்டம், கடத்தல் மற்றும் சட்ட விரோதமாக மதுவை தயாரித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.
- இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**(v) சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

- விவசாயிகள் தங்களின் சுய நகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.
- சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுங்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**(vi) மூலதன இலாபம் :**

மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

**(vii) புள்ளி விவர சிக்கல் :**

- ✦ புள்ளி விவரங்களை சேகரிப்பதில் பல பிரச்சனைகள் உள்ளன.
- ✦ ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை தேசிய வருவாய் கணக்கிடுதலில் பிரச்சனைகளைத் தரலாம்.

**38. பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.**

விடை. **சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள் :**

- ✦ இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாக பிரிக்கப்படுகிறது.
- ✦ தனிநபர்கள் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுபனங்கள் சேர்ந்த ஒரு குழு போன்றவைகளுக்கு இடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம்.
- ✦ ஒரு நாட்டின் பொரளாதாரம் கீழ்கண்ட துறைகளாக பிரிக்கப்படுகிறது.

(i) நிறுவனங்கள்
(ii) குடும்பங்கள்
(iii) அரசு
(iv) வெளிநாட்டு வாணிபம்
(v) மூலதன துறை

**(i) நிறுவனங்கள் :**

நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.

**(ii) குடும்பங்கள் :**

- ✦ குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியை பெற்று, அதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன. அதாவது ஊதியத்தை பெற்று பொருட்களை வாங்குகின்றன.
- ✦ நிறுவனங்கள் குடும்பங்களின் பணியை பெற்று கூலியை தருகின்றன.

**(iii) அரசு :**

- ✦ அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன.
- ✦ கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன.
- ✦ எடி மற்றும் பீகாக் கூற்றுப்படி, அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட நபர்கள் என குறிப்பிடுகின்றன. வரி, தண்டனை கட்டணம் மற்றம் கடன் மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது.

**(iv) வெளிநாட்டு வாணிபம் :**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டு கடன்கள் வெளிநாட்டு மூலதன வருமானம் மற்றும் செலுத்துதல்கள் போன்றவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகிறது.

**(v) மூலதனத்துறை :**

- ✦ மூலதனத்துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம் வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும்.
- ✦ மூலதனத்துறை நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றன.
- ✦ GDPல் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரம் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை என பிரிக்கப்படுகிறது.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

# கூடுதல் வினாக்கள்

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தெரிவு செய்க :** **1 மதிப்பெண்**

**1. GNP ன் விரிவாக்கம்**

அ) நிகர நாட்டு உற்பத்தி
ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
இ) மொத்த நிகரச் சொத்து
ஈ) மொத்த நாட்டு உற்பத்தி

[விடை: ஈ) மொத்த நாட்டு உற்பத்தி]

**2. GDP - ன் விரிவாக்கம்.**

அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
ஆ) மொத்த நேரடி உற்பத்தி
இ) நிகர உள்நாட்டு உற்பத்தி
ஈ) மொத்த பெறப்பட்ட உற்பத்தி

[விடை: அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி]

**3. காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி**

அ) $\dfrac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$
ஆ) சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்
இ) GNP – தேய்மானம்
ஈ) உள்ளீடு = வருமானம் = செலவு

[விடை: ஆ) சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்]

**4. வெளியீட்டு மதிப்பு =**

அ) விற்பனை + பங்கு மாற்றம்
ஆ) விற்பனை – சரக்கிருப்பு மாற்றம்
இ) விற்பனை ÷ பங்கு மாற்றம்
ஈ) விற்பனை × பங்கு மாற்றம்

[விடை: அ) விற்பனை + பங்கு மாற்றம்]

**5. தலா வருமானம் =**

அ) நாட்டு வருமானம் – மக்கள் தொகை
ஆ) நாட்டு வருமானம் + மக்கள் தொகை
இ) நாட்டு வருமானம் ÷ மக்கள் தொகை
ஈ) நாட்டு வருமானம் × மக்கள் தொகை

[விடை: இ) நாட்டு வருமானம் ÷ மக்கள் தொகை]

**6. ஒரு நாடு மற்ற நாடுகளுடன் வியாபார பரிவர்த்தனை மேற்கொள்ளாததை ______ என்கிறோம்.**

அ) திறந்தவெளி பொருளாதாரம்
ஆ) மூடப்பட்ட பொருளாதாரம்
இ) திட்டமிட்டப் பொருளாதாரம்
ஈ) கட்டளை பொருளாதாரம்

[விடை: ஆ) மூடப்பட்ட பொருளாதாரம்]

**7. ஒரு நாட்டின் தேசிய வருமானம் அந்நாட்டின் ______ நடவடிக்கைகளை வழங்குகிறது.**

அ) பொருளாதார நடவடிக்கை
ஆ) உற்பத்தி நடவடிக்கை
இ) நுகர்வு நடவடிக்கை
ஈ) தொழில் நடவடிக்கை

[விடை: அ) பொருளாதார நடவடிக்கை]

**8. நோபல் பரிசு பெற்றுள்ள சைமன் குஷ்நெட்ஸ் ______ கருத்துக்களை முதலில் அறிமுகப்படுத்தினார்.**

அ) தலா வருமானம்
ஆ) நாட்டு வருமானம்
இ) உள்நாட்டு வருமானம்
ஈ) தனி வருமானம்

[விடை: ஆ) நாட்டு வருமானம்]

**9. GDP ஐ சந்தை மதிப்பில் கணக்கிடுவதே ______ ஆகும்**

அ) GDP காரணி செலவு
ஆ) NDP காரணி செலவு
இ) GNP காரணிச் செலவு
ஈ) சந்தை விலையில் GDP

[விடை: ஈ) சந்தை விலையில் GDP]

**10. மொத்த உள்நாட்டு உற்பத்திச் செலவு ______ விலையில் கணக்கிடப்படுகிறது.**

அ) காரணி
ஆ) சந்தை
இ) உண்மை
ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை: ஆ) சந்தை]

www.surabooks.com

11. நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP –
அ) NNP ஆ) NDP
இ) GNP ஈ) தேய்மானம்
[விடை: ஈ) தேய்மானம்]

12. மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட _______ பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை கணக்கிடுதல் ஆகும்.
அ) முடிவுறா
ஆ) பகுதி முடிவடைந்த
இ) முடிவடைந்த
ஈ) எதுவுமில்லை [விடை: இ) முடிவடைந்த]

13. GNP - ல் கீழ்கண்ட _______ வகையான முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகள் உள்ளன.
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) நான்கு
[விடை: இ) ஐந்து]

14. ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு _______
அ) உற்பத்தி ஆ) நுகர்வு
இ) பகிர்வு ஈ) பரிமாற்றம்
[விடை: ஆ) நுகர்வு]

15. உற்பத்திக்காக வைப்பில் உள்ள முடிந்த மற்றும் முடியாத பொருள்கள் _______ ஆகும்.
அ) நிகர முதலீடு ஆ) முதலீடு
இ) மொத்த முதலீடு ஈ) 'அ' மற்றும் 'ஆ'
[விடை: இ) மொத்த முதலீடு]

16. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை கழித்தால் கிடைப்பது.
அ) X – M
ஆ) G + I
இ) X + M
ஈ) மேற்கூறிய அனைத்தும்
[விடை: அ) X – M]

17. GNP - சந்தை விலையில் = GDP சந்தை விலை + _______
அ) நிகர சந்தை வருமானம்
ஆ) வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்
இ) 'அ' மற்றும் 'ஆ'
ஈ) தனி வருமானம்
[விடை: ஆ) வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்]

18. NNP = _______ – தேய்மானம்
அ) GNP
ஆ) GDP
இ) NDP
ஈ) மேற்கூறிய அனைத்தும்
[விடை: அ) GNP]

19. காரணி செலவில் NNP = சந்தை விலையில் NNP – _______ + மானியம்.
அ) நேர்முக வரி ஆ) விகித வரி
இ) மறைமுக வரி ஈ) எதுவுமில்லை
[விடை: இ) மறைமுக வரி]

20. _______ வருமானம் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடுகிறது.
அ) மொத்த வருவாய்
ஆ) உண்மை வருமானம்
இ) தலா வருமானம்
ஈ) நாட்டு வருமானம்
[விடை: ஆ) உண்மை வருமானம்]

21. நாட்டு வருமானத்தை _______ யில் கணக்கிடப்படுகிறது.
அ) நிலையான விலை
ஆ) சந்தை விலை
இ) நடப்பு விலை
ஈ) மேற்கூறிய அனைத்தும்
[விடை: இ) நடப்பு விலை]



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



22. **வெளியீடு = வருமானம் = _______**

அ) விலை ஆ) செலவு
இ) வருமானம் ஈ) எதுவுமில்லை

[விடை: ஆ) செலவு]

23. **வெளியீடு = _______ = செலவு**

அ) வெளியீடு ஆ) செலவு
இ) விலை ஈ) வருமானம்

[விடை: ஈ) வருமானம்]

24. **_______ நாட்டின் பொருளாதார நலனை பிரதிபலிக்கிறது.**

அ) தனி வருமானம்
ஆ) தலா வருமானம்
இ) செலவிடக்கூடிய வருமானம்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை: ஆ) தலா வருமானம்]

25. **சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் சம்பாதித்த வருமானம் _______.**

அ) சூதாட்டம் மூலம் சம்பாதித்த வருமானம்
ஆ) மதுபானம், சட்டவிரோத பிரித்தெடுத்தல்
இ) சூதாட்டம்
ஈ) இவை அனைத்தும்

[விடை: ஈ) இவை அனைத்தும்]

26. **_______ தேசிய வருவாயில் இருந்து விலக்கப்பட்டவையாகும்.**

அ) மூலதன ஆதாயங்கள்
ஆ) சமூக கணக்கியல்
இ) புள்ளி விவர சிக்கல்கள்
ஈ) இவை எதுவுமில்லை

[விடை: அ) மூலதன ஆதாயங்கள்]

27. **நாட்டு வருமானத்தை கணக்கிடுவதில் _______க்கு அதிக கவனம் செலுத்த வேண்டும்.**

அ) மூலதன ஆதாயங்கள்
ஆ) சமூக கணக்கிடுதல்
இ) இருமுறை கணக்கிடுதல்
ஈ) புள்ளி விவர சிக்கல்

[விடை: இ) இருமுறை கணக்கிடுதல்]

28. **பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஏற்படுகிற சமூகச் செலவுகளின் அடிப்படையில் தேசிய வருமானம் கணக்கிடுவது _______.**

அ) சமூக கணக்கீட்டு செலவு
ஆ) புள்ளி விவர சிக்கல்
இ) மூலதன ஆதாயங்கள்
ஈ) எதுவுமில்லை

[விடை: அ) சமூக கணக்கீட்டு செலவு]

29. **அரசுத் துறையில் _______ நிலைகள் உள்ளன.**

அ) நான்கு ஆ) இரண்டு
இ) பல ஈ) மூன்று

[விடை: இ) பல]

30. **பாதுகாப்பு, பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவது _______.**

அ) தனியார்
ஆ) அரசு
இ) ஒழுங்குபடுத்தப்படாத நிறுவனம்
ஈ) எதுவுமில்லை [விடை: ஆ) அரசு]

31. **_______ மூன்று முறைகளில் கணக்கிடலாம்.**

அ) நாட்டு வருமானம்
ஆ) செலவிடப்பட்ட வருமானம்
இ) தலா வருமானம்
ஈ) தனி வருமானம்

[விடை: அ) நாட்டு வருமானம்]

32. **இரண்டாம் துறை _______**

அ) தொழிற்துறை
ஆ) வங்கியியல்
இ) விவசாயம்
ஈ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

[விடை: அ) தொழிற்துறை]

33. **மூன்றாம் பிரிவு _______**

அ) தொழிற்துறை
ஆ) வங்கியியல்
இ) வேளாண்மை
ஈ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

[விடை: ஆ) வங்கியியல்]



www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**34.** GDP = _______

அ) GDP சந்தை விலை + அயல் நாட்டில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம்.

ஆ) $GDP = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$

இ) GDP = GNP + அயல்நாட்டில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம்.

ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை: இ) GDP = GNP + அயல்நாட்டில் இருந்து ஈட்டப்பட்ட வருமானம்.]

**35. செலவிடக்கூடிய வருமானம் _______ ஆகும்.**

அ) $GDP = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$

ஆ) GNP – தேய்மானம்

இ) GDP – தேய்மானம்

ஈ) மொத்த நாட்டு உற்பத்தி

[விடை: ஈ) மொத்த நாட்டு உற்பத்தி]

**36. நாட்டு வருமானம் மக்களின் _______ ஐ அதிகரிக்கிறது.**

அ) வாழ்க்கை தரத்தை

ஆ) மக்களின் வறுமை

இ) செல்வத்தை

ஈ) தொழில் மயமாக்கல்

[விடை: அ) வாழ்க்கை தரத்தை]

**37. நாட்டு வருமானம் நாட்டுவருமான ஈவு எனவும் அழைக்கப்படுகிறது என்று கூறியவர் _______.**

அ) இர்விங்ஃபிஷர்

ஆ) ஆல்ஃபிரடு மார்ஷல்

இ) சாமுவேல்சன்

ஈ) J.M. கீன்ஸ்

[விடை: ஆ) ஆல்ஃபிரடு மார்ஷல்]

**38. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு _______.**

அ) GNP | ஆ) GDP

இ) நாட்டு வருமானம் | ஈ) தலா வருமானம்

[விடை: இ) நாட்டு வருமானம்]

**39.** GDP =

அ) GNP + தேய்மானம்

ஆ) GNP – அயல்நாட்டில் இருந்து ஈட்டப்பட்ட காரணி வருவாய்

இ) GNP – தேய்மானம்

ஈ) NNP – தேய்மானம்

[விடை: ஆ) GNP – அயல்நாட்டில் இருந்து ஈட்டப்பட்ட காரணி வருவாய்]

**40. _______ என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும்.**

அ) GDP | ஆ) NNP

இ) NDP | ஈ) GDP

[விடை: ஈ) GDP]

**41. உற்பத்தி நிலைகளில் _______ பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தை கணக்கிடலாம்.**

அ) விவசாயிகள் மட்டும்

ஆ) வணிகர் மட்டும்

இ) பணித்துறை மட்டும்

ஈ) உற்பத்திக் காரணிகள்

[விடை: ஈ) உற்பத்திக் காரணிகள்]

**42. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு அறிந்துகொள்ள _______ பயன்படுகிறது.**

அ) அந்நிய செலாவணி

ஆ) நாட்டு வருமானம்

இ) நாட்டு உற்பத்தி

ஈ) மேற்கூறிய அனைத்தும்

[விடை: இ) நாட்டு உற்பத்தி]

**43. உற்பத்திமுறையின் வேறு பெயர் _______**

அ) செலவின முறை | ஆ) வெளியீடு

இ) வருமான முறை | ஈ) எதுவுமில்லை

[விடை: ஆ) வெளியீடு]

**44. 2001ன் கணக்கெடுப்பின்படி இந்திய தலா வருமானம் _______ டாலர் ஆகும்.**

அ) 520 | ஆ) 460

இ) 240 | ஈ) 900

[விடை: ஆ) 460]



www.surabooks.com

45. _______ முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.
அ) செலவினம் ஆ) வருமான
இ) உற்பத்தி ஈ) எதுவுமில்லை
[விடை: இ) உற்பத்தி]

46. _______ முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.
அ) வருமான
ஆ) செலவு
இ) உற்பத்தி
ஈ) மேற்கூரிய அனைத்தும்
[விடை: அ) வருமான]

47. ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மெற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுவது _______ ஆகும்.
அ) செலவுமுறை ஆ) வேலைவாய்ப்பு
இ) வருமானம் ஈ) மக்கள்தொகை
[விடை: அ) செலவுமுறை]

48. _______ வருமானம் மூன்று முறைகளில் கணக்கிடப்படுகிறது.
அ) நாட்டு வருமானம்
ஆ) உள்நாட்டு உற்பத்தி
இ) தலா வருமானம்
ஈ) தனி வருமானம்
[விடை: அ) நாட்டு வருமானம்]

49. இரண்டாம் துறைக்கு எடுத்துக்காட்டு _______
அ) தொழிற்துறை
ஆ) பணித்துறை
இ) விவசாயம்
ஈ) வணிகத்துறை
[விடை: அ) தொழிற்துறை]

50. மூன்றாம் துறை என்பது _______
அ) தொழிற்துறை
ஆ) வங்கியியல்
இ) விவசாயம்
ஈ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதி
[விடை: ஆ) வங்கியியல்]

51. GNP = _______
அ) GNP சந்தை விலையில் + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.
ஆ) GDP குறைப்பான் = $\frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$
இ) GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் காரணி வருவாய்
ஈ) மேற்கூறிய அனைத்தும்.
[விடை: இ) GNP = GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் காரணி வருவாய்]

52. செலவிடக்கூடிய வருமானம் = _______
அ) GDP குறைப்பான் = $\frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$
ஆ) GNP – தேய்மானம்
இ) GDP – தேய்மானம்
ஈ) தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்
[விடை: ஈ) தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்]

53. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.
(அ) பொதுவான விலை ஏற்றம்
(ஆ) நாட்டு வருமானம் அதிகரித்தல்
(இ) சேமிப்பு அதிகரித்தல்
(ஈ) முதலீடு அதிகரித்தல்
[விடை :(ஆ) நாட்டு வருமானம் அதிகரித்தல்]

54. தலா வருமானம் இவ்வாறு கணக்கிடப்படுகிறது.
(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) மக்கள் தொகையில் வகுத்தல்
(ஆ) மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) மக்கள் தொகையில் வகுத்தல்
(இ) மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) மக்கள் தொகையில் பெருக்குவது
(ஈ) மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) வேலைக்குச் செல்வோரின் எண்ணிக்கையில் பெருக்கி வருகிறது.
[விடை : (அ) மொத்தஉள்நாட்டுஉற்பத்தியை (GDP) மக்கள் தொகையில் வகுத்தல்]


www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**55.** **தேய்மானம் தவிர்த்து முடிவுற்ற இறுதிப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.**

(அ) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

(இ) நிகர நாட்டு உற்பத்தி (NNP)

(ஈ) மொத்த நாட்டு உற்பத்தி (GNP)

[விடை : (அ) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)]

**56.** **நிகர நாட்டு உற்பத்திக்கும் (NNP) நிகர உள்நாட்டு உற்பத்திக்கும் இடையே உள்ள வேறுபாடானது.**

(அ) தேய்மானம்

(ஆ) உலகின் பிற பகுதிகளிலிருந்து நடப்பு மாற்றம்

(இ) மறைமுக வரி

(ஈ) வெளிநாடுகளிலிருந்து வரும் நிகரக் காரணி வருவாய்

[விடை : (ஈ) வெளிநாடுகளிலிருந்து வரும் நிகரக் காரணி வருவாய்]

**57.** **எல்லாராலும் புரிந்து கொள்ளக்கூடிய நாட்டு வருமானம் என்பது.**

(அ) மொத்த நாட்டு உற்பத்தி (GNP)

(ஆ) நிகர நாட்டு உற்பத்தி (NNP)

(இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

(ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

[விடை : (ஆ) நிகர நாட்டு உற்பத்தி (NNP)]

**58.** **________ புழக்கம் 'இணைப்பொருளாதாரம்' என்று கூறும் அளவிற்கு விரிவடைந்துள்ளது.**

(அ) வேளாண்மைப் பொருளியல்

(ஆ) தொழிற்துறை

(இ) வங்கியியல் நடவடிக்கை

(ஈ) கருப்புப் பணம்

[விடை : (ஈ) கருப்புப் பணம்]

**59.** **நிகர நாட்டு உற்பத்தி நிகர உள்நாட்டு உற்பத்தியை விட கூடுதலாக இருக்கக் காரணம் ________.**

(அ) இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகம்

(ஆ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகம்

(இ) ஏற்றுமதி இறக்குமதிக்குச் சமம்

(ஈ) எதுவுமில்லை

[விடை : (ஆ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகம்]

**60.** **மாற்று ஊதியம் என்பது ________.**

(அ) ஓய்வுப் பெற்றவர்களின் ஓய்வூதியம்

(ஆ) முதலீட்டாளர்கள் பெறும் வட்டி

(இ) நிலம் பெற்றவர்களின் வாடகை வருமானம்

(ஈ) தென்னிந்திய நடிகர் ஒருவர் வட இந்திய படத்தின் மூலம் பெறும் கூடுதல் வருவாயாகும்.

[விடை : (ஈ) தென்னிந்திய நடிகர் ஒருவர் வட இந்திய படத்தின் மூலம் பெறும் கூடுதல் வருவாயாகும்.]

## II. கீழ்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி சரியாக பொருத்து : 1 மதிப்பெண்

**1.**

| | | | |
|---|---|---|---|
| a) | செலவு முறையைப் பயன்படுத்தி GDP கணக்கிடும்போது | i) | தனி வருமானம் – நேர்முக வரி |
| b) | நிகர உள்நாட்டு உற்பத்தி | ii) | GNP – தேய்மானம் |
| c) | NNP | iii) | C + I + G + (X – M) |
| d) | செலவிடக்கூடிய வருமானம் | iv) | GDP – தேய்மானம் |

குறியீடுகள் :

அ) a-(i) b-(ii) c-(iv) d-(iii)

ஆ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)

இ) a-(iv) b-(iii) c-(i) d-(ii)

ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

[விடை: (ஆ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)]

**2.**

| | | | |
|---|---|---|---|
| a) | GDP குறைப்பான் | i) | $\frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$ |
| b) | தலா வருமானம் | ii) | இருமுறை கணக்கிடுதல் |
| c) | நடப்பு விலையில் நாட்டு வருமானம் | iii) | $\frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$ |
| d) | உற்பத்தி முறை | iv) | நடப்பு விலையில் தேசிய வருவாய் $\div P_1/P_0$ |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

ஆ) a-(ii) b-(iv) c-(i) d-(iii)

இ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)

ஈ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)

[விடை: (ஈ) a-(iii); b-(i); c-(iv) d-(ii)]





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

3.

| | | | |
|---|---|---|---|
| a) | உற்பத்தி முறை | i) | இறுதி சரக்கு – தொடக்க சரக்கு |
| b) | வருமான முறை | ii) | மொத்த செலவு முறை |
| c) | செலவு முறை | iii) | நிகர காரணி வருவாய் |
| d) | இருப்பு மாற்றம் | iv) | சரக்கு முறை |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)
ஆ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)

[விடை: (இ) a-(iv); b-(iii); c-(ii) d-(i)]

4.

| | | | |
|---|---|---|---|
| a) | முதன்மை துறை | i) | தொழிற் துறை |
| b) | இரண்டாம் துறை | ii) | GNP |
| c) | மூன்றாம் துறை | iii) | வேளாண்மை |
| d) | பெரிய மதிப்பு | iv) | பணித்துறை |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஆ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)

[விடை: (ஆ) a-(iii); b-(i); c-(iv) d-(ii)]

5.

| | | | |
|---|---|---|---|
| a) | GNP | i) | 3 வகை |
| b) | நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறை | ii) | 5 வகை |
| c) | அடிப்படைக் கருத்துக்கள் | iii) | மாற்றுச் செலுத்தல்கள் |
| d) | தேசிய வருமானத்தை கணக்கிடுவதில் ஏற்படும் சிக்கல்கள் | iv) | GNP, GDP, NNP, NDP |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஆ) a-(iii) b-(iv) c-(i) d-(ii)
இ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)
ஈ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)

[விடை: இ) a-(ii); b-(i); c-(iv) d-(iii)]

6.

| | | | |
|---|---|---|---|
| a) | இந்தியாவின் நிதி ஆண்டு | i) | தொழிற்துறை |
| b) | மூன்றாம் துறை | ii) | ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை |
| c) | NNP | iii) | பணித்துறை |
| d) | இரண்டாம் துறை | iv) | நிகர நாட்டு உற்பத்தி |

குறியீடுகள் :

அ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஆ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
இ) a-(iv) b-(i) c-(iii) d-(ii)
ஈ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)

[விடை: ஆ) a-(ii); b-(iii); c-(iv) d-(i)]

7.

| | | | |
|---|---|---|---|
| a) | GNP | i) | வேளாண்மை |
| b) | PQLI | ii) | வருமான முறை |
| c) | முதன்மை துறை | iii) | பொருளாதார நலன் |
| d) | பகிர்வு பக்கம் | iv) | மொத்த நாட்டு உற்பத்தி |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
ஆ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)
இ) a-(iv) b-(iii) c-(i) d-(ii)
ஈ) a-(iii) b-(ii) c-(iv) d-(i)

[விடை: இ) a-(iv); b-(iii); c-(i) d-(ii)]

## III. கீழ்கண்டவற்றுள் சரியா, தவறா என தெரிவு செய் : 1 மதிப்பெண்

1. (i) உற்பத்தி வருமானத்தை உருவாக்குகிறது.
(ii) வருமானம் செலவை உருவாக்குகிறது.
அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]

2. (i) நாட்டின் செல்வம் என்பது மக்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆகும்.
(ii) நான்கு துறை வருமான ஓட்ட மாதிரியில் இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் இருக்கும்.

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]

3. (i) செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது.
(ii) இந்த வருமானம்தான் தனிநபர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]

4. (i) நோபல் பரிசு பெற்றுள்ள சைமன் குஷ்நெட்ஸ் இந்தக் கருத்துருவை முதலில் அறிமுகப்படுத்தினார்.
(ii) தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பண்களின் பண மதிப்பாகும்.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]

5. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்
(i) உற்பத்தி முறை
(ii) வருவாய் முறை

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]

6. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதால் ஏற்படும் பிரச்சனைகள்.
(i) சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்.
(ii) புள்ளி விவர சிக்கல்

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]

7. (i) ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
(ii) நாட்டு வருமானத்தை உற்பத்தி, வருமானம் மற்றும் செலவு முறையில் கணக்கிடும்போது இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்காது.

அ) (i) மற்றும் (ii) சரி
ஆ) (i) மற்றும் (ii) தவறு
இ) (i) சரி ஆனால் (ii) தவறு
ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]

## IV. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தியதை தேர்ந்தெடு : 1 மதிப்பெண்

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள் | - | மூன்று முறை |
| ஆ) | செலவு முறை | - | வெளியீடு முறை |
| இ) | வருமான முறை | - | மதிப்பு முறை |
| ஈ) | உற்பத்தி முறை | - | காரணி முறை |

[விடை: அ) நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள் - மூன்று முறை]

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | உள்ளீடு | - | உற்பத்திக் காரணிகள் |
| ஆ) | MP | - | FC – மறைமுக வரி + மானியம் |
| இ) | FC | - | MP – நேர்முகக வரிகள் + மானியம் |
| ஈ) | GNP | - | C – I – G – (X–M) |

[விடை: அ) உள்ளீடு - உற்பத்திக் காரணிகள்]

தேசிய வருவாய்


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

## V. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | நிகர உள்நாட்டு உற்பத்தி | - | GNP – தேய்மானம் |
| ஆ) | மொத்த உள்நாட்டு உற்பத்தி | - | C + I + G + X–M |
| இ) | தலா வருமானம் | - | $\frac{\text{தேசிய வருவாய்}}{\text{மக்கள் தொகை}}$ |
| ஈ) | GDP குறைப்பான் | - | $\frac{\text{GDP}}{\text{உண்மை GDP}}$ |

[**விடை: ஈ) GDP குறைப்பான் = $\frac{\text{GDP}}{\text{உண்மை GDP}}$**]

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | செலவிடக்கூடிய வருமானம் | - | நுகர்வு – சேமிப்பு |
| ஆ) | வெளியீடு | - | வருமானம் = செலவு |
| இ) | NNP | - | NNP – தேய்மானம் |
| ஈ) | NNP காரணி செலவு | - | NNP சந்தை விலை – மறைமுக வரிகள் + மானியம் |

[**விடை: இ) NNP = NNP – தேய்மானம்**]

## VI. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க. : 1 மதிப்பெண்

1. **கூற்று (A) : செலவின முறை ஒட்டு மொத்த செலவு முறை எனவும் அழைக்கப்படுகிறது.**

**காரணம் (R) : முதலீட்டு பொருள் வாங்கும் செலவு நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[**விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

2. **கூற்று (A) : தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.**

**காரணம் (R) : செலவுமுறையில் மட்டும் நாட்டு வருமானம் கணக்கிட முடியும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[**விடை: இ) A சரி ஆனால் R தவறு.**]

3. **கூற்று (A) : உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.**

**காரணம் (R) : ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வாணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[**விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.**]

## VII. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்

1. **நாட்டு வருமானத்தின் அடிப்படை கருத்துக்கள்**

அ) மொத்த நாட்டு உற்பத்தி

ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

இ) நிகர நாட்டு உற்பத்தி

ஈ) வெளியீடு = வருமானம் = செலவு

[**விடை: ஈ) வெளியீடு = வருமானம் = செலவு**]

2. **நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள்**

அ) உற்பத்தி முறை ஆ) நுகர்வு முறை

இ) வருமான முறை ஈ) செலவின முறை

[**விடை: ஆ) நுகர்வு முறை**]

அத்தியாயம் 2

www.surabooks.com

3. **தலா வருமானம்**

அ) ஒரு நாட்டின் மொத்த வருமானம்

ஆ) ஒருவருடைய சராசரி வருமானம்

இ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை

ஈ) GDP / மக்கள் தொகை

[விடை: அ) ஒரு நாட்டின் மொத்த வருமானம்]

4. **உழைப்பாளரின் வருமானம்**

அ) கூலி

ஆ) வருமான ஈவு (Divident)

இ) சம்பளம்

ஈ) உற்பத்தி திறன் ஊக்கு ஊதியங்கள் (Fring benefits)

[விடை: ஆ) வருமான ஈவு (Divident)]

## பகுதி - ஆ

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.** **2 மதிப்பெண்கள்**

1. **நிகர உள்நாட்டு உற்பத்தி கணக்கிடும் வாய்ப்பாடு?**

விடை. நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP – தேய்மானம்

2. **தலா வருமானத்தை கணக்கிடும் வாய்ப்பாடு?**

விடை.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

3. **நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள் யாவை?**

விடை. (i) உற்பத்தி அல்லது மதிப்பு கூடுதல் முறை.

(ii) வருமானம் அல்லது காரணிகளின் ஊதியமுறை மற்றும்.

(iii) செலவு முறை

4. **உண்மை வருமானம் என்றால் என்ன?**

விடை. (i) பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

(ii) உண்மை வருவாயை கீழ்கண்ட முறையில் கணக்கிடலாம்.

| | | |
|---|---|---|
| நிலையான விலையில் தேசிய வருமானம் | = | நடப்பு விலையில் தேசிய வருவாய் ÷ $P_1/P_0$ |

5. **தேசிய வருவாய் என்றால் என்ன?**

விடை. (i) ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு, அதனை பணமதிப்பில் மதிப்பிடப்பட வேண்டும்.

(ii) அதாவது நமது சுய நுகர்வுக்காகவோ அல்லது சேமிப்பிற்காகவோ பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பண மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்க வேண்டும்.

6. **மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன? அதன் சூத்திரம் எழுதுக?**

விடை. (i) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

(ii) செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும்

(iii) GDP = C + I + G + (X – M)

7. **தனிநபர் வருமானங்களை கணக்கிடும் வாய்ப்பாடு.**

விடை. தனி நபர் வருமானம் = தேசிய வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்ப்பரேட் இலாபம்) + மாற்று செலுத்தல்கள்.

8. **செலவிடக்கூடிய வருமானம் என்றால் என்ன?**

விடை. (i) செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது.

(ii) தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளை கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம்.

9. **மூலதன இலாபம் என்றால் என்ன?**

விடை. மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது.

10. **சமூக கணக்கிடுதல் துறைகள் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?**

விடை. (i) நிறுவனங்கள்

(ii) குடும்பங்கள்

(iii) அரசு

(iv) வெளிநாட்டு வாணிபம்

(v) மூலதன துறை



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**11. தேசிய வருவாயின் அடிப்படை கருத்துக்கள் யாவை?**

விடை. (i) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

(ii) நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

(iii) மொத்த தேசிய உற்பத்தி (GNP)

(iv) நிகர தேசிய உற்பத்தி (NNP)

## பகுதி - இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக. 3 மதிப்பெண்கள்**

**1. தேசிய வருமானத்தை கணக்கிடும் முறைகளில் உள்ள பிரச்சனைகள் யாவை?**

விடை. (i) மாற்றுச் செலுத்தல்கள்

(ii) தேய்மானங்கள் மதிப்பிடுவதில் உள்ள சிக்கல்

(iii) பணம் செலுத்தப்படாத சேவைகள்

(iv) சட்ட விரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்

(v) சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம்

(vi) மூலதன இலாபம்

(vii) புள்ளி விவர சிக்கல்

**2. புள்ளி விவரம் சிக்கல் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்களை விளக்குக?**

விடை. (i) விவசாயத்துறையில் உற்பத்தி அளவை கணக்கிடுவது சிரமம் மேலும் கால்நடைத்துறையின் உற்பத்தி போன்றவை பற்றிய புள்ளி விவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் கிடைக்காது.

(ii) பல்வேறு மொழி மற்றும் கலாச்சாரம் போன்ற காரணத்தினாலும் புள்ளி விவரங்களை மதிப்பிடுவதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

(iii) அரசு அலுவலர்கள் - மக்கள் உறவு நம் நாட்டில் சுமூகமாக இல்லாத நிலையில் புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் பிரச்சனைகள் வருகின்றன. மக்கள் உண்மையான புள்ளி விவரங்கள் தருவதில்லை.

(iv) புள்ளி விவரங்களை சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும். திறமையற்றவர்களாகவும் உள்ளனர்.

(v) ஆகையால் தேசிய வருவாய் மதிப்பீட்டில் துல்லிய தன்மை இல்லாமலும் புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லாமலும் இருக்கின்றன.

**3. தேய்மானம் என்றால் என்ன?**

விடை. தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. இவைகளை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**4. தலா வருமானம் பற்றி விளக்குக?**

விடை. (i) தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும்.

(ii) தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது தலா வருமானம்.

(iii) $\text{தலா வருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

**5. இந்திய தேசிய வருவாயின் அடையாளங்களை கூறு.**

விடை. தேசிய வருவாயை அளவிடுவதற்கு கீழ்கண்ட கருத்துக்கள் பயன்படுகின்றன.

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(iii) நிகர நாட்டு உற்பத்தி

(iv) காரணிச் செலவில் நிகர தேசிய உற்பத்தி

(v) தனிநபர் வருமானம்

(vi) செலவழிக்கக் கூடிய வருமானம்

(vii) தலா வருமானம்

(viii) உண்மை வருமானம்

(xi) GDP குறைப்பான்

## பகுதி - ஈ

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி : 5 மதிப்பெண்கள்**

**1. நாட்டு வருமானத்தை வருமான முறையில் கணக்கிடுவதை பற்றி விளக்குக?**

விடை. (i) வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது.

www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(ii) வருமான முறை காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**கணக்கிடுவதன் நிலைகள் :**

(1) மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

(2) காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம் மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.

(i) **உழைப்பாளர் வருமானம் :** கூலி மற்றும் சம்பளம், சமூக பாதுகாப்புக்கு. முதலாளியின் பங்கு, உற்பத்தி திறன் ஊக்கு ஊதியங்கள்.

(ii) **மூலதன வருமானம் :** இலாபம், வட்டி, இலாப ஈவு மற்றும் இராயல்டி.

(iii) **கலப்பு வருமானம் :** விவசாயம் மற்றும் பண்ணை சிறு தொழில் செய்வோர் மற்றும் பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(iv) $$Y = w + r + i + \pi + (R - P)$$

இதில்,

w = கூலி, r = வாடகை, i = வட்டி, $\pi$ = இலாபம், R = ஏற்றுமதி, P = இறக்குமதி.

**2. தேசிய வருமானத்தை உற்பத்தி முறையில் எவ்வாறு கணக்கிடுவாய் என விளக்கு.**

விடை. (i) உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும்.

(ii) இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது.

(iii) ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும்.

(iv) ஒரு துறையின் வெளியீடு மற்றொரு துறையின் உள்ளீடாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இருமுறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது.

(v) எனவே இதற்கு இருமுறை கணக்கிடல் என்று பெயர்.

(vi) இதனை தவிர்த்து இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(vii) இந்தியாவின் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

(viii) 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பயிரின் அதன் ஒரு ஹெட்டேருக்கான சராசரி உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலம் பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

(ix) ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

(x) இந்த 64 வகை பயிர்களின் மொத்த உற்பத்தி மதிப்பை எடுத்துக்கொண்டு விவசாயத் துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

(xi) விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம், சரி செய்தல் மற்றும் தேய்மானம் போன்ற செலவுகள் கழிக்கப்படுகின்றன.

(xii) இதுபோல, மற்ற துறைகளுக்கும் (உதாரணம் கால்நடை காடுகள், மீன், சுரங்கம், தொழிற்சாலை) மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சந்தை விலையால் பெருக்கி உற்பத்தியின் மொத்த மதிப்பு பெறப்படுகிறது.

(xiii) இவ்வாறுதான், பிற துறைகளின் உற்பத்தி நிகர பங்களிப்பின் மதிப்பு தேசிய வருவாயில் எவ்வளவு இருக்கிறது என கணக்கிடப்படுகிறது.

**3. தேசிய வருவாய் மற்றும் பொதுநலன் ஆகியவற்றின் குறைபாடுகளை விளக்குக.**

விடை. (i) பொருட்கள் மற்றும் பணிகளின் அளிப்பை பொது நலன் சார்ந்து உள்ளது.

(ii) நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதன பொருட்கள் அதிகமாக இருந்தால் பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும்.



www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(iii) இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றை மாசுபடுத்தி அதிகமான GDP யை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.

(iv) இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் தேசிய உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.

(v) பெண்களுக்கு வேலைவாய்ப்பை தருதல் மற்றும் உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் போன்றவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம்.

(vi) ஆகவே PQLI என்பது பொருளாதார நலன் கணக்கிடுவதில் முக்கிய குறியீட்டெண்ணாக உள்ளது.

(vii) மக்களின் வாழ்க்கை தரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு போன்றவை PQLI உள்ளடங்கி இருக்கிறது.

☆☆☆

www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

அத்தியாயம்
# 3
# வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

www.surabooks.com

## பொருளடக்கம்


3.1 அறிமுகம்

3.2 முழுவேலை வாய்ப்பின் பொருள்

3.3 வேலையின்மையின் வகைகள்

3.4 வேலை வாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாடு

3.4.1 சேயின் சந்தை விதி

3.5 வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸின் கோட்பாடு

3.6 விளைவுத் தேவை

3.6.1 தொகு தேவைச் சார்பு (Average Demand Function)

3.6.2 தொகு அளிப்புச் சார்பு (Aggregate Supply Function)

3.6.3 ADF மற்றும் ASF ன் சமநிலை

3.7 தொன்மையியம் மற்றும் கீன்ஸியம் – ஓர் ஒப்பீடு

3.8 தொகுப்புரை




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

## கருத்துப் படம்




## முக்கியக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **முழு வேலை வாய்ப்பின் பொருள்** | : | நல்ல உடல் நலம் உள்ள தனி நபர்கள் மற்றும் நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம். |
| **வேலையின்மையின் வகைகள் (Types of unemployment)** | : | வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும். |
| **வாணிபச் சூழவ் வேலையின்மை (Cyclical unemployment)** | : | கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சூழல் வேலையின்மை (ஊலஉடைஉயட ரநேஅயீடிலஅநவே) என்று பெயர். |
| **பருவகால வேலையின்மை (Seasonal unemployment)** | : | ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். |
| **கற்றோர் வேலையின்மை (Educated unemployment)** | : | சில நேரங்களில் படித்து கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர் இதுவே கற்றோர் வேலையின்மை எனப்படும். |
| **விளைவுத் தேவை (Effective Demand)** | : | விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். |
| **தொகு அளிப்புச் சார்பு [Aggregate Supply Function : (ASF)]** | : | தொகு அளிப்புச் சார்வு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பை குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும். |

www.surabooks.com

| | | |
|---|---|---|
| இறுதிநிலை நுகர்வு விருப்பம் | : | இருக்கின்ற வருமானத்தில் ஓர் அலகு வருமானம் உயரும் போது அதிகரிக்கக் கூடிய நுகர்வுச் செலவு. |
| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் | : | புதிய மூலதன பொருளின் செலவைகாட்டிலும் அதிகமாக எதிர்பார்க்கக் கூடிய விளைவு விகிதம். |
| பண அளிப்பு | : | ஒரு பொருளாதாரத்தில் புழக்கத்தில் இருக்கிற மொத்த பணத்தின் இருப்பு. |

# இலக்கணங்கள்

| | | |
|---|---|---|
| வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாட்டின் இலக்கணம் | : | ஒனாகாட் P மற்றும் ஒனாகாட் R ன் கூற்றுப்படி, "புகுத்தப்பட்ட சோம்பேறித்தனத்தினால், வேலையில்லாதவர்கள், ஒழுக்கச் சிதைவு, நம்பிக்கையின்மை, வெறுப்புணர்வு மற்றும் சுய மரியாதை இழப்பு ஆகியவற்றால் துன்புறுகிறார்கள்". |
| முழு வேலை வாய்ப்பிற்கான இலக்கணம் | : | லர்னரின் கூற்றுப்படி, "முழு வேலை நிலை என்பது கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்கிறார். |
| வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் இலக்கணம் | : | உற்பத்தியின் மூலம் ஒரு நபர் அவர் வருவாயை ஈட்டுகிறார், அது மற்றவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குவதற்கு செலவிடப்படுகிறது. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி மொத்த வருவாய்க்கு சமமாக இருக்கும். |
| கீன்ஸின் தொன்மைக் கோட்பாட்டின் இலக்கணம் | : | கீன்ஸின் கூற்றுப்படி, "தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஒரு முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் சந்தை சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும்". |
| விளைவுத் தேவை பற்றிய இலக்கணம் | : | கீன்ஸின் கூற்றுப்படி, பொருட்கள் மற்றும் பணிகளை நுகர்வு மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும். |
| தொகு தேவைச் சார்பின இலக்கணம் | : | கீன்ஸின் கூற்றுப்படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை. |



www.surabooks.com

# புத்தக வினாக்கள்

## மாதிரி வினாக்கள்

### பகுதி – அ

**சரியான விடையை தெரிவு செய்க :**

**1. நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது _______ எனப்படும்.**

அ) முழு வேலைவாய்ப்பு

ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு

இ) வேலைவாய்ப்பின்மை

ஈ) வேலைக்கான வாய்ப்பு

[விடை: அ) முழு வேலைவாய்ப்பு]

**2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு _______.**

அ) இயங்கா சமுதாயம்

ஆ) சமதர்ம சமுதாயம்

இ) இயங்கும் சமுதாயம்

ஈ) கலப்புப் பொருளதாரம்

[விடை: இ) இயங்கும் சமுதாயம்]

**3. மறைமுக வேலையின்மையில், உழைப் பாளியின் இறுதிநிலை உற்பத்தி**

அ) பூஜ்யம் ஆ) ஒன்று

இ) இரண்டு ஈ) நேர்மறை

[விடை: அ) பூஜ்யம்]

**4. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் பிரதான இயல்பு _______.**

அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு

ஆ) பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்

இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது

ஈ) நிறை குறை போட்டி

[விடை: ஆ) பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்]

**5. J. B. சே ஒரு _______.**

அ) புதிய – தொன்மை பொருளியலாளர்

ஆ) தொன்மை பொருளியலாளர்

இ) நவீன பொருளியலாளர்

ஈ) புதிய பொருளியலாளர்

[விடை: ஆ) தொன்மை பொருளியலாளர்]

**6. கீன்ஸின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?**

அ) முழு வேலைவாய்ப்பு

ஆ) தன் விருப்ப வேலையின்மை

இ) தன் விருப்பமற்ற வேலையின்மை

ஈ) குறைவு வேலைவாய்ப்பு

[விடை: ஈ) குறைவு வேலைவாய்ப்பு]

**7. வேலைவாய்ப்பு பற்றி தொன்மை கோட்பாட்டின் மையக்கருத்து என்பது _______.**

அ) குறைந்து செல் விளைவு விதி

ஆ) தேவை விதி

இ) அங்காடி விதி

ஈ) நுகர்வு விதி [விடை: இ) அங்காடி விதி]

**8. கீன்ஸின் கூற்றுப்படி வேலையின்மை என்பது _______.**

அ) விளைவு அளிப்பு பற்றாக்குறை

ஆ) விளைவு தேவை பற்றாக்குறை

இ) இரண்டும் பற்றாக்குறை

ஈ) எவையும் இல்லை

[விடை: ஆ) விளைவு தேவை பற்றாக்குறை]

**9. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது _______ நெகிழ்வு ஆகும்.**

அ) தேவையின் ஆ) அளிப்பின்

இ) மூலதனத்தின் ஈ) வட்டியின்

[விடை: ஈ) வட்டியின்]



www.surabooks.com

**10.** **நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் _______ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.**

அ) கீன்ஸ் ஆ) சே (Say)

இ) தொன்மையது ஈ) வேலைவாய்ப்பு

[விடை: அ) கீன்ஸ்]

**11.** **வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து _______ ஆகும்.**

அ) தொகுத் தேவை

ஆ) தொகு அளிப்பு

இ) விளைவுத் தேவை

ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு

[விடை: இ) விளைவுத் தேவை]

**12.** **தொகுத் தேவையின் கூறு _______ ஆகும்.**

அ) தனிநபர் தேவை

ஆ) அரசுச் செலவு

இ) ஏற்றுமதி மட்டும்

ஈ) இறக்குமதி மட்டும்

[விடை: ஆ) அரசுச் செலவு]

**13.** **மொத்த அளிப்பு சமம் _______.**

அ) C+I+G ஆ) C+S+G+(X–M)

இ) C+S+T+(X–M) ஈ) C+S+T+Rf

[விடை: ஈ) C+S+T+Rf]

**14.** **தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்ஸின் கோட்பாடு _______ யை எடுத்துரைக்கிறது.**

அ) அரசுத் தலையீடின்மை

ஆ) உச்சஅளவுத் தலையீடு

இ) சில சூழல்களில் அரசின் தலையீடு

ஈ) தனியார் துறை தலையீடு

[விடை: இ) சில சூழல்களில் அரசின் தலையீடு]

**15.** **கீன்ஸின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில், _______ பொருளாதார மந்த நிலைக்குக் காரணமாக உள்ளது.**

அ) குறைவான உற்பத்தி

ஆ) அதிகத் தேவை

இ) நெகிழ்வற்ற அளிப்பு

ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை

[விடை: ஈ) உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை]

**16.** **தொன்மைக் கோட்பாடு _______ ஐ ஆதரிக்கிறது.**

அ) சமநிலை வரவு செலவு

ஆ) சமமற்ற வரவு செலவு

இ) உபரி வரவு செலவு

ஈ) பற்றாக்குறை வரவு செலவு

[விடை: அ) சமநிலை வரவு செலவு]

**17.** **_______ சமநிலையை கீன்ஸிடைய கோட்பாடு வலியுறுத்தியது.**

அ) மிகக்குறுகிய காலம் ஆ) குறுகிய காலம்

இ) மிக நீண்ட காலம் ஈ) நீண்ட காலம்

[விடை: ஆ) குறுகிய காலம்]

**18.** **தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் _______க்கான வெகுமதி.**

அ) முதலீடு ஆ) தேவை

இ) மூலதனம் ஈ) சேமிப்பு

[விடை: ஈ) சேமிப்பு]

**19.** **கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது _______ ஆகும்.**

அ) வட்டி வீதம்

ஆ) விளைவுத் தேவை

இ) தொகுத் தேவை

ஈ) தொகு அளிப்பு [விடை: அ) வட்டி வீதம்]

**20.** **ஒரு பொருளாதாரத்தில் _______ இயக்கத்தை சே (Say) யின் விதி வலியுறுத்தியது.**

அ) தூண்டப்பட்ட விலைக் கருவி

ஆ) தானியங்கும் விலைக் கருவி

இ) தூண்டப்பட்ட தேவை

ஈ) தூண்டப்பட்ட முதலீடு

[விடை: ஆ) தானியங்கும் விலைக் கருவி]



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## பகுதி – ஆ

### கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரிரு வாக்கியங்களில் விடையளி :

**21. "முழு வேலைவாய்ப்பு" வரையறு.**

விடை. லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலைவுகிறது" என்கிறார்.

**22. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**

விடை. (i) இந்திய கிராமப்புறங்களில் வேலை–யின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் காணப்படுகின்றன.

(ii) கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது.

**23. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.**

விடை. (i) உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

(ii) உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமை பற்றாக்குறை , இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலைதேடும் உழைப்பாளர்களும் இதில் அடங்குவர்.

**24. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.**

விடை. (i) ஒரு பொருளுக்கான தேவை குறைதல் அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இரு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்கு காரணமாகிறது.

(ii) உதாரணமாக, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை குறைந்துள்ளது.

(iii) இந்தியாவில் மூலதன பற்றாக்குறையால் மக்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

**25. சே விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.**

விடை. (i) ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.

(ii) முழு வேலை நிலை நிலவும்.

(iii) உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவும்.

**26. "விளைவுத் தேவை" என்றால் என்ன?**

விடை. விளைவுத் தேவை என்பது உற்பத்திச் செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும்.

**27. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**

விடை. **தொகு அளிப்பின் நான்கு கூறுகளாவன :**

(i) மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (c)

(ii) மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (s)

(iii) நிகர வரிவசூல் (T) அரசு பெற்ற மொத்த வரிவருமான்தில் இருந்து மாற்றுச் செலுத்தல்கள் ஓய்வூதியம், மானியம், அரசு செலுத்த வேண்டிய வட்டி ஆகியவற்றை கழித்த பிறகு கிடைக்கும் தொகையாகும்.

(iv) தனிநபர் (விரும்பப்படுகிற) வெளிநாட்டவர்க்கு (உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்தல்கள் மற்றும் உதவித்தொகை இது $R_1$ (வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை) என குறிக்கப்படுகிறது.

## பகுதி – இ

### கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் பதில் தருக :

**28. கீழ்க்காணுபவற்றை சுருக்கமாக விவரி.**

**அ. பருவ கால வேலையின்மை**

**ஆ. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை**

**இ. படித்தவர் வேலையின்மை**

விடை. அ. **பருவ கால வேலையின்மை :**

✦ ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

- ✦ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி போன்றவை குறிப்பிட்ட வருடத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்கள் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது.
- ✦ எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற் சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும்.

**ஆ. உடன்பாடில்லா வேலையின்மை :**

- ✦ உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
- ✦ உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (மகிழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

**இ. படித்தவர் வேலையின்மை :**

- ✦ சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.
- ✦ இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர்.

**காரணங்கள் :**

தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை, அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல். இலகுவன வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

**29. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின் படி கூலிக் குறைப்பு எவ்வாறு வேலையின்மைப் பிரச்சனைக்குத் தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.**

**விடை.** (i) பேராசிரியர் A.C. பிகுவின் கருத்துப்படி, பொருளாதார மந்த காலங்களில் வேலையில்லா பிரச்சனை தோன்றுகிறது என்கின்றார்.

(ii) நிறைவு போட்டியின் அடிப்படையில் பொருளாதார அமைப்பின் போக்கு தானாகவே தொழிலாளர் சந்தையில் வேலைவாய்ப்பு அளிக்கிறது என்று A.C. பிகு கூறுகிறார்.

(iii) சந்தை பொருளாதாரத்தில் ஊதிய கட்டமைப்பு மற்றும் மாநில குறுக்கீடு கடுமையாக இருப்பதற்கு வேலையின்மை பிரச்சனை நிலவுவதாக கருகின்றனர்.

(iv) இதனால் அரசாங்கத்தின் அனைத்து குறுக்கீடுகள் அகற்றப்பட்டு போட்டியின் சக்திகள் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட்டால் ஊதிய விகிதங்களின் சந்தை தூண்டப்பட்ட மாற்றங்கள் முழு வேலைக்கு வழிவகுக்கும்.

(iv) பேராசிரியர் A.C. பிகு கீழ்க்கண்ட சமன்பாடுகளை கொடுத்துள்ளார்.

$$N = q . Y / W$$

N = தொழிலாளர்களின் எண்ணிக்கை.
Q = (பின்னம்) வருமானம் மற்றும் சம்பளத்தின் பின்னம்.
Y = தேசிய வருமானத்தில் முழு வேலை வாய்ப்பு நிலை.
W = கூலி விகிதம்.

Y கொடுக்கப்பட்டு இருப்பின் N அதிகரிக்கும் W குறையும் (அதாவது தேசிய வருமானம் முழு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பின், உழைப்பாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது கூலி குறையும் இதை கீழ்கண்ட வரைப்படம் விளக்குகிறது.

ஊதிய குறைப்பு விகிதம் வேலைவாய்ப்பை அதிகிக்கிறது.



www.surabooks.com




(A)




(B)

**வரைபட விளக்கம் :**

✦ S = உழைப்பு அளிப்பு கோடு.

✦ D = உழைப்பு தேவை கோடு.

✦ உழைப்பு தேவைக்கோடு மற்றும் உழைப்பு அளிப்பு கோடு ஒன்றோடொன்று வெட்டும் புள்ளியில் E என்ற முழு வேலைவாய்ப்பை காட்டுகிறது.

(v) கூலி அளவு குறைக்கப்பட்டால், W/P வேலையின்மை மறைந்து முழு வேலைவாய்ப்பை அடைந்து விடும். இது வரைபடம் B யில் காட்டப்படுகிறது.

(vi) $MP_L$ இறுதிநிலை உழைப்பு வளைவின் குறுகலான தயாரிப்பு ஆகும். இது கீழ்நோக்கி சரிந்து செல்கிறது.

(vii) ஊதிய விகிதம் $(W_1/P_1)$ யிலிருந்து (W/P) க்கு குறையும் போது முழு வேலைவாய்ப்பு மட்டத்தை அடைகிறது.

(viii) பண ஊதியத்தில் ஒரு வெட்டு உள்ளது, உண்மையான ஊதியம் அதே அளவிற்கு குறைந்து, வேலையின்மையை குறைத்து இறுதியில் முழு வேலையை அளிக்கிறது.

**30. J. B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.**

**விடை.** **சே விதியின் விளைவுகள் :**

(i) அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வேலையில்லை.

(ii) பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால் முழு வேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்தி காரணிகள் அதன் உற்பத்தி திறனுக்கு இணையாகும் வரை ஏற்றும் கொள்ளும்.

(iii) விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவையிருக்காது.

(iv) வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

(v) பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்கமாட்டார்கள்.



www.surabooks.com

**31. கீன்ஸின் கோட்பாட்டை தொடர் வரைபடம் (Flowchart) மூலம் விளக்குக.**

**விடை.**




**32. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.**

**விடை.** (i) உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்ப்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை.

(ii) பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது.

(iii) வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாயை தொகு தேவை என்கிறோம்.

**தொகு தேவையின் நான்கு கூறுகளாவன :**

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி (Export of Import)

**தொகு தேவையின் சூத்திரம்**

$$AD = C + I + G + (X - M)$$

**33. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**

**விடை.** (i) ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும்.

(ii) தொகு அளிப்புச் சார்பு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பைக் குறிக்கிறது.

(iii) மேலும், தொகு அளிப்பு என்பது தேவையான உற்பத்தியை நாட்டில் அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தேவையான உழைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் பிற பொருட்கள் பயன்படுத்துவதைக் குறிக்கும்.

மொத்த அளிப்பு = $C + S + T + R_1$




(iv) வரைபடம் வேலை வாய்ப்புக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.

(v) பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும்போது உள்ள நிலையையும் மற்றொரு $(Z_1)$ வேலைவாய்ப்பைப் பொருத்து பணக்கூலி மாறும் போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.

(vi) Zகோடு நேர்கோடாகவும், $Z_1$ கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளைகோடாகவும் இருக்கிறது.

(vii) $ON_f$ அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது.

(viii) எனவே $N_f$க்குப் பின்னர், தொகு அளிப்புக் கோடு செங்குத்தாக நெகிழ்வற்றதாக உள்ளது.

**34. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக. [ஏதேனும் ஐந்து]**

விடை.

| வ. எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட கால சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பண்த்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்தனைக்கு மட்டுமே பணம் உதவும். |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை. | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அரசுத் தலையீடு அனுமதிக்கப்படுகிறது | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது |

## பகுதி – ஈ

## கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

**35. வேலையின்மைகளின் வகைகளை விவரி.**

விடை. வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

(i) **வாணிபச் சூழல் வேலையின்மை :**

கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சூழல் வேலையின்மை என்று பெயர்.

(ii) **பருவகால வேலையின்மை :**

- ✦ ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர்.
- ✦ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் கரும்பு, பருத்தி.

(iii) **தற்காலிக (அல்லது) உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை :**

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.

(iv) **கற்றோர் வேலையின்மை :**

- ✦ சிலநேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை. அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர்.

- தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை, அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் கற்றோர் வேலையின்மை நிலவுகிறது.

(v) **தொழில் நுட்ப வேலையின்மை :**

புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

(vi) **அமைப்புசார் வேலையின்மை :**

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (eg. Type Machine, Tape Recorder, Radio, Camera etc) அல்லது பிற பொருட்களின் தேவை அதிகரித்தல் இடு பொருட்கள் இன்மை முதலீடு பற்றாக்குறை ஆகியவை இவ்வகை வேலையின்மைக்கு காரணங்களாகும்.

(vii) **மறைமுக வேலையின்மை :**

தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும்.

**36. சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.**

விடை. **J. B. சேயின் சந்தை விதியின் திறனாய்வு– களாவன :**

(i) கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.

(ii) உற்பத்தி அதிகரிக்கும் அளவுக்கு தேவை அதிகரித்தால் இந்த விதி செயல்படாது.

(iii) பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது.

(iv) தனிநபர் எதிர்பாராத சூழ்நிலைக்காகவும், வியாபாரி எதிர்கால நடவடிக்கைகாகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள் ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

(v) அளிப்பு தன் தேவையை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால் அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது.

(vi) முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலையுள்ளதால் முழு வேலை வாய்ப்புக்கு சாத்தியமில்லை.

(vii) அளவுக்கு அதிகமான உற்பத்தி அதிக வேலையின்மையை ஏற்படுத்தும். இது பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் என கீன்ஸ் கருதுகிறார்.

**37. ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.**

விடை. **ADF மற்றும் ASF ன் சமநிலை :**

கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாட்டில், ADF மற்றும் ASF சமநிலையை விளக்க குடும்பங்கள் மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

(i) நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும் முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன.

(ii) நுகர்வுச் சார்பு நேர்கோடகவும், முதலீடு தன்னிச்சையானது எனவும் கீன்ஸ் கோட்பாடு அனுமானிக்கிறது.

கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை.
2. சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை.

(iii) மொத்த தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை இவ்வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.



(iv) தொகு தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சமநிலையடைகிறது.

(v) இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_o$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு $N_1R_1$ ஆக இருக்கும் ஆனால் $M_1N_1$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும்.

(vi) எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1R_1$ ஆகும்.

(vii) இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.

(viii) சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர். ஏனெனில் $N_o$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை தொகு அளிப்பை விட குறைவாக இருக்கும்.

(ix) ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்து முக்கிய பங்கு வகுக்கிறது.

**38. தொன்மைக் கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.**

விடை.

| வ. எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை தேவை. |
| 4. | அரசு தலையீடு அனுமதிக்கப்படுகிறது. | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. |
| 5. | முதலாளித்துவம் முரண்பாடுகளைக் கொண்டது. | முதலாளித்துவம் சரியானது. |
| 6. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது. | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன்வைக்கப்படுகிறது. |
| 7. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| 8. | வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது. | வட்டி வீதம் மாறாதது. |
| 9. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது. | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது. |
| 10. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

அத்தியாயம் 3

www.surabooks.com

# கூடுதல் வினாக்கள்

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தெரிவு செய்க:**

**1 மதிப்பெண்**

1. **_______ என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகதத்தில் வேலை செய்ய தயாராக இருப்பவர்கள் அனைவருக்கு தகுந்த வேலை இல்லா நிலையை குறிக்கும்.**

அ) முழு வேலை

ஆ) குறைவான வேலை

இ) வேலையின்மை

ஈ) வேலைவாய்ப்பு

[விடை: இ) வேலையின்மை]

2. **வட்டி நெகிழ்வுத் தன்மை _______க்கு இடையே உள்ள சமத்துவத்தை வெளிப்படுத்துகிறது.**

அ) வருமானம் மற்றும் நுகர்வு

ஆ) சேமிப்பு மற்றும் முதலீடு

இ) தேவை மற்றும் அளிப்பு

ஈ) உழைப்பு மற்றும் மூலதனம்

[விடை: ஆ) சேமிப்பு மற்றும் முதலீடு]

3. **தற்செயலான வேலையின்மை இல்லாததால், வேலை செய்யும் முழுமையான வேலைவாய்ப்பு _______ என்று கூறியவர்.**

அ) J. B. சே ஆ) ரிக்கார்டோ

இ) J. M. கீன்ஸ் ஈ) ஆடம்ஸ்மித்

[விடை: இ) J. M. கீன்ஸ்]

4. **முழு வேலை நிலை என்பது, "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்று கூறியவர்.**

அ) J. M. கீன்ஸ்

ஆ) லர்னர்

இ) J. B. சே

ஈ) மேற்கூரிய அனைத்தும்

[விடை: ஆ) லர்னர்]

5. **'வட்டி வீதம் மாறாதது (Stock)' என்று கூறியவர்கள்.**

அ) சமத்துவம்

ஆ) கீன்ஸியம்

இ) தொன்மையியம்

ஈ) மேற்காணும் அனைத்தும்

[விடை: இ) தொன்மையியம்]

6. **'தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது' என்று கூறியவர்கள் _______.**

அ) சமத்துவம் ஆ) கீன்ஸியம்

இ) தொன்மையியம் ஈ) ஆ மற்றும் இ

[விடை: ஆ) கீன்ஸியம்]

7. **'வட்டி என்பது ரொக் இருப்பை விட்டுக் கொடுத்ததற்கான வெகுமதி' என்று கூறியவர்கள் _______.**

அ) கீன்ஸியம் ஆ) சமத்துவம்

இ) அ மற்றும் ஆ ஈ) தொன்மையியம்

[விடை: அ) கீன்ஸியம்]

8. **எல்ல சூழ்நிலைகளிலும் _______ச் சூழலுக்கும் மட்டுமே பொருந்தக் கூடியது.**

அ) முழு வேலைவாய்ப்பு

ஆ) வேலையின்மை

இ) பருவகால வேலையின்மை

ஈ) கற்றோர் வேலையின்மை

[விடை: அ) முழு வேலைவாய்ப்பு]

9. **ஒரு நபர் தனது வருவாயை _______ல் இருந்து பெறுகிறார்.**

அ) உற்பத்தி ஆ) கொள்முதல்

இ) விற்பனை ஈ) எதுவுமில்லை

[விடை: அ) உற்பத்தி]

10. **மொத்த உற்பத்தி _______ க்கு சமமாகும்.**

அ) மொத்த வருவாய்

ஆ) மொத்த வருமானம்

இ) நிகர வருமானம்

ஈ) மொத்த விற்பனை

[விடை: அ) மொத்த வருவாய்]



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**11.** **கீன்ஸின் வருமான மற்றும் வேலைவாய்ப்புக் கோட்பாடு ஒரு _______ கோட்பாடாகும்.**

அ) நீண்ட கால ஆ) குறுகிய கால
இ) முதலீட்டு ஈ) உற்பத்தி

[விடை: ஆ) குறுகிய கால]

**12.** **வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸ் கோட்பாட்டின் ஆர்ம்பப் புள்ளியே "_______" கருத்தாகும்.**

அ) எதிர் நோக்கும் தேவை
ஆ) அங்காடித் தேவை
இ) விளைவுத் தேவை
ஈ) தனியார் தேவை

[விடை: இ) விளைவுத் தேவை]

**13.** **_______ 20 ஆம் நூற்றாண்டில் ஒரு தாக்கத்தை உருவாக்கிய பொருளியல் அறிஞர் ஆவார்.**

அ) J. B. சே
ஆ) மார்ஷல்
இ) ஜான் மேனார்டு கீன்ஸ்
ஈ) ஆடம்ஸ்மித்

[விடை: இ) ஜான் மேனார்டு கீன்ஸ்]

**14.** **விளைவுத் தேவை _______க்கு சமமாகும்.**

அ) நாட்டு வருமானம்
ஆ) மொத்த வருமானம்
இ) மொத்த வருவாய்
ஈ) நிகர வருமானம்

[விடை: அ) நாட்டு வருமானம்]

**15.** **_______ ஒரு பரிமாற்றக் கருவியாகும்.**

அ) பணம் ஆ) பொருட்கள்
இ) உழைப்பு ஈ) பணி

[விடை: அ) பணம்]

**16.** **_______ ஒத்த தன்மை கொண்டதாக இருக்கிறது.**

அ) பொருட்கள் ஆ) உற்பத்தி
இ) உழைப்பு ஈ) பணம்

[விடை: இ) உழைப்பு]

**17.** **கூலி மற்றும் விலை _______.**

அ) நெகிழ்ச்சியுடையது
ஆ) தொடர்புடையது
இ) ஒத்த தன்மையுடையது
ஈ) எதுவுமில்லை

[விடை: அ) நெகிழ்ச்சியுடையது]

**18.** **மாறாத முதலீடு மற்றும் தொழில்நுட்ப அறிவு _______ காலத்திற்கு பொருந்தும்.**

அ) நடுத்தர காலம் ஆ) நீண்ட காலம்
இ) குறுகிய காலம் ஈ) எதுவுமில்லை

[விடை: இ) குறுகிய காலம்]

**19.** **சேயின் சந்தை விதி, வேலைவாய்ப்புப் பற்றிய _______ கோட்பாடாகும்.**

அ) தொன்மை ஆ) பொருளாதார
இ) சுற்றுச்சூழல் ஈ) விகிதங்கள்

[விடை: அ) தொன்மை]

**20.** **'அளிப்பு அதன் _______ ஐ தானே உருவாக்கும்'.**

அ) தேவை ஆ) உற்பத்தி
இ) பணத்தை ஈ) விற்பனையை

[விடை: அ) தேவை]

**21.** **_______ விலை என்பது விற்பனையால் கிடைத்த மொத்த வருவாயை குறிக்கிறது.**

அ) தொகு அளிப்பு ஆ) தொகு தேவை
இ) தொகு வருவாய் ஈ) தொகு விலை

[விடை: அ) தொகு அளிப்பு]

**22.** **ஒரு தொழில்முனைவோர் _______ஐ ஊக்குவிப்பர்.**

அ) அதிக உழைப்பு ஆ) அதிக வருவாய்
இ) அதிக உற்பத்தி ஈ) அதிக முதலீடு

[விடை: அ) அதிக உழைப்பு]

**23.** **பாரம்பரிய முரண்பாடு _______ ல் உள்ளன.**

அ) சமத்துவம்
ஆ) பழமை பொருளாதாரம்
இ) முதலாளித்துவம்
ஈ) பொருளாதாம்

[விடை: இ) முதலாளித்துவம்]

**24.** **கீன்ஸிசம் ஒரு _______ அடிப்படையில் இருக்கிறது.**

அ) சேமிப்பு ஆ) உற்பத்தி
இ) நுகர்வு ஈ) எதுவுமில்லை

[விடை: அ) சேமிப்பு]




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

25. _______ விதி அதிக தொழிலாளர்கள் வேலை செய்வதால் குறைந்த வருமானம் பெறுகின்றது என்பதை விளக்குகிறது.

அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
ஆ) சம இறுதிநிலைத் தேவை விதி
இ) தேவை விதி
ஈ) எதுவுமில்லை

[விடை: அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி]

26. _______ தொன்மை பொருளியல் அறிஞர்கள் ஆவார்கள்.

அ) ஆடம்ஸ்மித் ஆ) J. B. சே
இ) J. M. கீன்ஸ் மற்றும் மார்ஷல்
ஈ) அ மற்றும் ஆ

[விடை: ஈ) அ மற்றும் ஆ]

27. வரம்புக்குட்பட்ட தேவைகள் இல்லாததால், வேலைவாய்ப்பின்மை குறைகிறது என்று கூறியவர் _______.

அ) J. M. கீன்ஸ் ஆ) J. B. சே
இ) மார்ஷல் ஈ) லர்னர்

[விடை: அ) J. M. கீன்ஸ்]

28. J. B. சே ஒரு _______ பொருளியல் அறிஞர் ஆவார்.

அ) பிரென்ச் ஆ) பிரிட்டிஸ்
இ) டச்சு ஈ) இந்தியன்

[விடை: அ) பிரென்ச்]

29. J. M. கீன்ஸ் _______ ஆம் நூற்றாண்டில் தோன்றிய பொருளாதார வல்லுனர் ஆவார்.

அ) 17 ஆ) 18
இ) 19 ஈ) 20

[விடை: ஈ) 20]

30. கீன்ஸினும் கோட்பாடு _______ சமநிலையை அடிப்படையாக் கொண்டது.

அ) மிகவும் குறுகிய கால சமநிலை
ஆ) குறுகியக் கால – சமநிலை
இ) நீண்ட கால – சமநிலை
ஈ) மிகவும் நீண்ட கால – சமநிலை

[விடை: ஆ) குறுகியக் கால – சமநிலை]

31. தொன்மையியம் கோட்பாடு _______ சமநிலையை அடிப்படையாக கொண்டது.

அ) மிகவும் நீண்ட காலம்
ஆ) குறுகியக் காலம்
இ) நீண்ட காலம்
ஈ) மிகவும் நீண்ட காலம்

[விடை: இ) நீண்ட காலம்]

32. மிதவை தூண்டுவது _______ ஐ குறிக்கிறது.

அ) வளர்ச்சி விகிதம் ஆ) குறைத்தல்
இ) தேர்வு முறை ஈ) ஒழுக்க நெறி

[விடை: ஈ) ஒழுக்க நெறி]

33. _______ 1963 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அ) RDC ஆ) IMF
இ) RBI ஈ) SBI

[விடை: அ) RDC]

34. _______ ஜூலை மாதம் 1982 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அ) ARDC ஆ) NABARD
இ) ICICI ஈ) இந்தியன் வங்கி

[விடை: ஆ) NABARD]

35. J. M. கீன்ஸ் _______ ஆம் ஆண்டு பிறந்தார்.

அ) 1885 ஆ) 1884
இ) 1883 ஈ) 1882

[விடை: இ) 1883]

36. கீன்ஸின் வேலைவாய்ப்பு வருமானம் வட்டி பற்றிய பொதுக் கோட்பாட்டை அறிமுகப்படுத்திய ஆண்டு _______.

அ) 1932 ஆ) 1930
இ) 1933 ஈ) 1936

[விடை: ஈ) 1936]



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## II. கீழ்கண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி சரியாக பொருத்து: 1 மதிப்பெண்

**1.**

| | | | |
|---|---|---|---|
| a) | முழு வேலை | i) | வேலையின்மையின் வகைகள் |
| b) | அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும் | ii) | லர்னர் |
| c) | நாடுகளின் செல்வம் | iii) | J. B. சே |
| d) | கற்றோர் வேலையின்மை | iv) | ஆடம் ஸ்மித் |

குறியீடுகள் :

அ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
ஆ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
இ) a-(ii) b-(i) c-(iv) d-(iii)
ஈ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)

**[விடை: அ) a-(ii); b-(iii); c-(iv) d-(i)]**

**2.**

| | | | |
|---|---|---|---|
| a) | வாணிபச் சூழல் வேலையின்மை | i) | சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் தோன்றுகிறது. |
| b) | பருவக்கால வேலையின்மை | ii) | படித்த படிப்புக்கு தகுந்த வேலை கிடைக்கப் பெறாமை |
| c) | கற்றோர் வேலையின்மை | iii) | கீழ்நோக்கிய பகுதியில் பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்வது |
| d) | அமைப்புசார் வேலையின்மை | iv) | ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
ஆ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)
இ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)
ஈ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

**[விடை: அ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)]**

**3.**

| | | | |
|---|---|---|---|
| a) | AD | i) | ஒட்டு மொத்த அளிப்பு / தொகு அளிப்பு பணி |
| b) | மொத்த அளிப்பு | ii) | C+I+G+(X–M) |
| c) | ED | iii) | C+S+T+RF |
| d) | ASF | iv) | Y=C+I = வெளியீடு = வேலைவாய்ப்பு |

குறியீடுகள் :

அ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
ஆ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)
இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)
ஈ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

**[விடை: இ) a-(vi); b-(iii); c-(ii) d-(i)]**

**4.**

| | | | |
|---|---|---|---|
| a) | கீன்ஸின் புத்தகம் | i) | ADF |
| b) | வட்டி வீதம் | ii) | வேலைவாய்ப்பு, வருமானம், வட்டி பற்றிய பொதுக் கோட்பாடு |
| c) | ஒட்டு மொத்த தேவைப் பணி | iii) | கேம்பிரிட்ஜ் |
| d) | ஜான் மேனார்டு கீன்ஸ் | iv) | ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி |

குறியீடுகள் :

அ) a-(i) b-(ii) c-(iii) d-(iv)
ஆ) a-(ii) b-(iv) c-(i) d-(iii)
இ) a-(iii) b-(iv) c-(ii) d-(i)
ஈ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

**[விடை: ஆ) a-(iii); b-(iv); c-(ii) d-(i)]**

**5.**

| | | | |
|---|---|---|---|
| a) | நீர்மை விருப்பம் | i) | ASF |
| b) | தொகு அளிப்பு பணி | ii) | அன்றாட நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளும் செலவு |
| c) | MEC | iii) | J. M. கீன்ஸ் |
| d) | பரிமாற்ற நோக்கம் | iv) | வட்டி வீதம் |




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

குறியீடுகள் :

அ) a-(iii) b-(i) c-(iv) d-(ii)

ஆ) a-(ii) b-(iii) c-(iv) d-(i)

இ) a-(iv) b-(iii) c-(ii) d-(i)

ஈ) a-(iii) b-(i) c-(ii) d-(iv)

**[விடை: அ) a-(ii); b-(iii); c-(iv) d-(i)]**

## III. கீழ்கண்டவற்றுள் சரியா, தவறா என தெரிவு செய் : 1 மதிப்பெண்

**1.** (i) சேயின் கூற்றுப்படி, முழு வேலை நிலை நிலவுகிறது.

(ii) நிறைகுறைப் போட்டி நிலவுகிறது.

அ) (i) மற்றும் (ii) சரி

ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி ஆனால் (ii) தவறு

ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]**

**2.** சமநிலையை நிர்ணயிக்கும் இரு அணுகு முறைகள்.

(i) தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை.

(ii) சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை

அ) (i) மற்றும் (ii) சரி

ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி ஆனால் (ii) தவறு

ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]**

**3.** (i) தொகுத்தேவை மற்றும் தொகு அளிப்பு 'E' என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது.

(ii) "அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்".

அ) (i) மற்றும் (ii) சரி

ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி ஆனால் (ii) தவறு

ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: அ) (i) மற்றும் (ii) சரி]**

**4.** (i) கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.

(ii) அதிக உற்பத்திற்கோ வேலை வாய்பின்மைக்கோ வாய்ப்புண்டு.

அ) (i) மற்றும் (ii) சரி

ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி ஆனால் (ii) தவறு

ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: இ) (i) சரி ஆனால் (ii) தவறு]**

**5.** (i) நாட்டில் பொதுவாக முழு வேலை நிலை நிலவுகிறது.

(ii) கூலியும், விலையும் நெகிழ்ச்சித் தன்மையுடையது.

அ) (i) மற்றும் (ii) சரி

ஆ) (i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி ஆனால் (ii) தவறு

ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி

**[விடை: ஈ) (i) தவறு ஆனால் (ii) சரி]**

## IV. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தியதை தேர்ந்தெடு : 1 மதிப்பெண்

**1.**

| | | | |
|---|---|---|---|
| அ) | கீன்ஸ் | - | வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் கோட்பாடு |
| ஆ) | வேலைவாய்ப்பு | - | வாணிபச்சூழல் |
| இ) | வளரும் நாடுகள் | - | இந்தியா |
| ஈ) | வேலையின்மை | - | வேலை செய்ய முடியாமை |

**[விடை: அ) கீன்ஸ் - வேலைவாய்ப்பு மற்றும் வருமானக் கோட்பாடு]**

**2.**

| | | | |
|---|---|---|---|
| அ) | வாணிபச்சூழல் | - | பரவலான வேலையின்மை |
| ஆ) | சேயின் விதி | - | வேலையின்மை |
| இ) | கீன்ஸின் கோட்பாடு | - | சந்தை விதி |
| ஈ) | ADF | - | தொகு அளிப்புப் பணி |

**[விடை: அ) வாணிபச் சூழல் - பரவலான வேலையின்மை]**



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



3.

| | | | |
|---|---|---|---|
| அ) | ED = Y | - | C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு |
| ஆ) | சமநிலை | - | உழைப்பு |
| இ) | நுண்ணியியல் அணுகுமுறை | - | தேசிய பிரச்சனை |
| ஈ) | கீன்ஸிசம் | - | சம நிதி நிலை அறிக்கை |

[விடை: அ) ED = Y = C + I = வெளியீடு = வேலைவாய்ப்பு]

4.

| | | | |
|---|---|---|---|
| அ) | முதலாளித்துவ பொருளாதாரம் | - | தலையிடா அங்காடிப் பொருளாதாரம் |
| ஆ) | சமநிலை அளவு | - | தேவையான முழு வேலைவாய்ப்பு |
| இ) | விளைவுத் தேவை | - | தொகுத் தேவை |
| ஈ) | J. S. மில் | - | நாடுகளின் செல்வம் |

[விடை: அ) முதலாளித்துவ பொருளாதாரம் - தலையிடா அங்காடிப் பொருளாதாரம்]

5.

| | | | |
|---|---|---|---|
| அ) | அளிப்பு உருவாக்குவது | - | தேவை |
| ஆ) | தொன்மை கோட்பாடு | - | வேலையின்மை |
| இ) | தகுதி | - | தற்காலிக வேலையின்மை |
| ஈ) | தொழில் நுட்ப வேலையின்மை | - | தேவையான திறன் குறைவு |

[விடை: அ) அளிப்பு உருவாக்குவது - தேவை]

6.

| | | | |
|---|---|---|---|
| அ) | மறைமுக வேலையின்மை | - | ஒரு வகை வேலையின்மை |
| ஆ) | ASF | - | தொகுத் தேவை பணி |
| இ) | தொன்மையியம் | - | அரசு தலையீடு |
| ஈ) | வேலையின்மையின் வகை | - | பருவக் கால வேலையின்மை |

[விடை: ஈ) வேலையின்மையின் வகை - பருவக் கால வேலையின்மை]

## V. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்

1.

| | | | |
|---|---|---|---|
| அ) | சுய வட்டி | - | பொருளாதாரம் |
| ஆ) | ஜான் மேனார்டு கீன்ஸ் | - | 20 நூற்றாண்டின் பொருளியல் அறிஞர் |
| இ) | விளைவுத் தேவை | - | சமமான நாட்டு வருமானம் |
| ஈ) | சமநிலைப் புள்ளி | - | வேலையின்மை |

[விடை: ஈ) சமநிலைப்புள்ளி - வேலையின்மை]

2.

| | | | |
|---|---|---|---|
| அ) | தொன்மையியம் | - | சமநிதிநிலை அறிக்கை |
| ஆ) | கீன்ஸிசம் | - | குறுகிய கால சமநிலை |
| இ) | வட்டிவீதம் | - | இருப்பு |
| ஈ) | முழு வேலைவாய்ப்பு | - | வேலையின்மை |

[விடை: ஈ) முழு வேலைவாய்ப்பு - வேலையின்மை]

3.

| | | | |
|---|---|---|---|
| அ) | மறைமுக | - | வேலையின்மை |
| ஆ) | தற்காலிக | - | முழு வேலைவாய்ப்பு |
| இ) | பருவகால | - | வேலையின்மை |
| ஈ) | அமைப்புசார் | - | வேலையின்மை |

[விடை: ஆ) தற்காலிக - முழு வேலைவாய்ப்பு]

4.

| | | | |
|---|---|---|---|
| அ) | முழு வேலைவாய்ப்பு | - | உழைப்பு சக்தி |
| ஆ) | வளர்ந்து வரும் நாடுகள் | - | அமைப்புசார் வேலையின்மை |
| இ) | தொன்மை கோட்பாடு | - | தனிக் கோட்பாடு |
| ஈ) | மொத்த அளிப்பு கோடு | - | நெகிழ்ச்சியற்ற |

[விடை: இ) தொன்மை கோட்பாடு - தனிக் கோட்பாடு]




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

5.

| | | | |
|---|---|---|---|
| அ) | நுகர்வு | - | இணைந்து / சார்ந்து |
| ஆ) | ஆண்டு உற்பத்தி | - | ஆண்டுத் தேவை |
| இ) | சேமிப்பு | - | முதலீடு |
| ஈ) | உழைப்பு | - | பரிமாற்றப் பணி |

[விடை: ஈ) உழைப்பு - பரிமாற்றப் பணி]

## VI. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க. : 1 மதிப்பெண்

1. **கூற்று (A) : தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும்.**

**காரணம் (R) : இத்தகைய வேலையின்மையால் உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜ்யமாகவோ, குறைவாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கும்.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R]

2. **கூற்று (A) : 'வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாட்டை' கீன்ஸ் 1936 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்.**

**காரணம் (R) : இந்நூல் பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது.**

அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் A-க்கான சரியான விளக்கம் R இல்லை.

இ) A சரி ஆனால் R தவறு.

ஈ) A தவறு ஆனால் R சரி.

[விடை: அ) A மற்றும் R இரண்டும் சரி மேலும் A-க்கான சரியான விளக்கம் R]

## VII. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய் : 1 மதிப்பெண்

1. **"அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்" என்ற கூற்றை கூறியவர் யார்?**

அ) J. S. மில்

ஆ) J. M. கீன்ஸ்

இ) டேவிட் ரிக்கார்டோ

ஈ) J. B. சே [விடை: ஈ) J. B. சே]

2. **கீன்ஸிசம்**

அ) அரசுத் தலையீடு அனுமதிக்கப்படுகிறது.

ஆ) நாட்டின் பிரச்சனைகளை தீர்க்க பேரியல் அணுகுமுறை தேவை.

இ) சேமிப்பு கெடுதல்.

ஈ) சமநிலை வரவு செலவுத் திட்டம்.

[விடை: ஈ) சமநிலை வரவு செலவுத் திட்டம்.]

3. **தொன்மையியம்**

அ) முதலாளித்துவம் சரியானது.

ஆ) பேரியல் அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணும் அணுகுமுறை.

இ) தலையிடாக் கொள்கையை வலியுறுத்துகிறது.

ஈ) நீண்டகாலச் சமநிலை.

[விடை: ஆ) பேரியல் அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணும் அணுகுமுறை.]

## பகுதி - ஆ

## கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி. 2 மதிப்பெண்கள்

1. **வாணிபச் சூழல் வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.**

விடை. (i) கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை என்று பெயர்.

(ii) வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில் உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும்.



www.surabooks.com

**2. தொகு ஒட்டு மொத்த தேவையின் நான்கு கூறுகள் யாவை?**

விடை. (i) நுகர்வோர் தேவை (நுகர்வு தேவை)

(ii) முதலீட்டு தேவை

(iii) அரசு செலவு

(iv) நிகர ஏற்றுமதி (ஏற்றுமதி – இறக்குமதி)

**3. தொகு அளிப்பை [ஒட்டு மொத்த அளிப்பு] கணக்கிடும் சூத்திரம்?**

விடை. மொத்த அளிப்பு = $C + S + T + R_1$ ஆக, ஒரு பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம்.

**4. வேலையின்மையின் ஏதேனும் இரு வகைகளை எழுதுக?**

விடை. (i) வாணிபச் சூழல் வேலையின்மை.

(ii) பருவகால வேலையின்மை.

**5. சேயின் சந்தை விதி பற்றி எழுதுக?**

விடை. (i) J. B. சேயின் கருத்துப்படி, "அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்."

(ii) சேயின் கருத்துப்படி, பொருளாதாரத்தில், நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்ததற்கு உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியத்தை அளிக்கப்படுகின்றது.

**6. கீன்ஸ் கோட்பாட்டை பற்றி எழுது?**

விடை. கீன்ஸின் கருத்துக்கள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. அவரது கருத்துப்படி, வேலைவாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

**7. வேலையின்மை என்றால் என்ன?**

விடை. வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

**8. பண அளிப்பு என்றால் என்ன?**

விடை. ஒரு பொருளாதாரத்தில் புழக்கத்தில் இருக்கிற மொத்த பணத்தின் இருப்பே பண அளிப்பாகும்.

**9. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்க திறனை நிர்ணயிக்கின்ற இரு காரணிகள் யாவை?**

விடை. (i) முதலீட்டு அளவு

(ii) வட்டி வீதம்

இவை இரண்டும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை நிர்ணயிக்கின்ற இரண்டு காரணிகளாகும்.

**10. கீன்ஸின் மூன்று நீர்மை விருப்ப கோட்பாட்டை எழுதுக.**

விடை. (i) பரிமாற்ற நோக்கம்

(ii) முன்னெச்சரிக்கை நோக்கம்

(iii) ஊக வாணிக நோக்கம்

## பகுதி – இ

**கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக.** **3 மதிப்பெண்கள்**

**1. தொன்மை பொருளியல் கோட்பாட்டின் வேலையின்மை பிரச்சனையை விளக்குக?**

விடை. (i) வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடு எந்த ஒரு தனிக்கோட்பாட்டையும் பெற்று இருக்கவில்லை.

(ii) நாட்டில் வருமானம் மற்றும் வேலை பற்றி பன்முக பார்வையில் வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடுகள் இருந்தன.

(iii) ஒரு பொருளாதாரம் நீண்ட காலத்தில் பணவீக்கம் இன்றி முழு வேலைநிலையுடன் இயங்கும் என்று தொன்மை பொருளியல் அறிஞர்கள் அனுமானித்தனர்.

(iv) பொருளாதாரத்தில் கூலியும் விலையும் நெகிழ்ச்சியுடையதாக இருக்கும் எனவும், சந்தையில் போட்டி நிலவும் எனவும், அரசு தலையிடாக் கொள்கையை பின்பற்றும் என்றும் நம்பினர்.

**2. விளைவுத் தேவைப் பற்றி விளக்குக?**

விடை. (i) வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸ் கோட்பாட்டின் ஆரம்பப் புள்ளியே "விளைத்தேவை" கருத்தாகும்.

(ii) விளைவுத் தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும்.

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(iii) கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி, பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வு மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும்.

(iv) இதில், மொத்த செலவு, தேசிய உற்பத்திக்கும், தேசிய வருவாய்க்கும் சமமாக இருக்கும்.

(v) ஒரு நாட்டில் உற்பத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு விளைவு தேவையின் அளவைப் பொறுத்து அமைகிறது.

**3. தொகு தேவையை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

விடை. கீன்ஸ் கோட்பாட்டின்படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது.

(i) உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை.

(ii) வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாய் எனலாம்.

**தொகுத் தேவையின் நான்கு பகுதிகள் :**

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி

**4. சேயின் விதியில் உள்ள குறைபாடுகளைப் பற்றி விளக்குக?**

விடை. (i) கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.

(ii) உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.

(iii) பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதன விகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.

(iv) தனிநபர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

**5. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**

விடை. **தொகு அளிப்பின் கூறுகளாவன :**

1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (c).
2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (s).
3. நிகர வரி வசூல் (T). அரசு பெற்ற மொத்த வரிவருமானத்தில் இருந்து மாற்றுச் செலுத்தல்கள், ஓய்வூதியம், மானியம், அரசு செலுத்த வேண்டிய வட்டி ஆகியவற்றைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகையாகும்.
4. தனிநபர் (விரும்பப்படுகிற வெளி நாட்டவர்க்கு உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்தல்கள் மற்றும் உதவித்தொகை இது $R_1$ (வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை) என குறிக்கப்படுகிறது.

## பகுதி – ஈ

**கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி : 5 மதிப்பெண்கள்**

**1. சேயின் சந்தை விதியின் எடுகோள்களை விளக்குக.**

விடை. சேயின் சந்தைவிதி கீழ்க்கண்ட எடுகோள்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

(i) ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.

(ii) முழு வேலை நிலை நிலவும்.

(iii) மக்கள் அவர்களின் சுய விருப்பங்களால் உந்தப்படுகிறார்கள் அவர்களின் விருப்பங்கள் பொருளாதார முடிவுகளை நிர்ணயிக்கின்றன.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(iv) சந்தை சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன.

(v) உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவும்.

(vi) கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு.

(vii) பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.

(viii) இது நீண்ட கால பகுத்தாய்வை அடிப்படையாக் கொண்டது.

(ix) அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.

(x) பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால் முழுவேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும்.

**2. ADF ன் படம் வரைக.**

**விடை.**




**3. மொத்த அளிப்பு வளைகோட்டின் படம் வரைக?**

**விடை.**




**4. பருவகால வேலையின்மைக்கும் கற்றோர் வேலையின்மைக்குமுள்ள வேறுபாடு யாது?**

**விடை.**

| வ. எண் | பருவகால வேலையின்மை | கற்றோர் வேலையின்மை |
|---|---|---|
| 1. | ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர் | சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். |
| 2. | விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். | தவறான கல்விமுறை வேலைக்கான திறன், பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது. |
| 3. | தொழில்கள் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும் மற்ற பருவங்களில் வேலையிருக்காது. | புதிய தொழில் நுட்பங்களும், கண்டுபிடிப்புகளும் வேலையின்மையை உருவாக்குகின்றனர். |

☆☆☆



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

அத்தியாயம் 4

# நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

## பொருளடக்கம்

4.1 அறிமுகம்
4.2 நுகர்வு சார்பு
4.2.1 நுகர்வு சார்பின் பொருள்
4.2.2 முக்கிய கருத்துக்கள்
4.2.3 கின்ஸின் நுகர்வு பற்றிய உளவியல் விதி
4.2.4 நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற காரணிகள் (அகவய மற்றும் புறவய காரணிகள்)
4.2.5 இந்தியா மற்றும் பன்னாட்டு பண நிதியம்
4.3 முதலீட்டு சார்பு
4.3.1 முதலீடு
4.3.2 முதலீட்டின் வகைகள்
4.3.3 முதலீட்டுச் சார்பின் காரணிகள்
4.3.4 வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவு
4.3.5 மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன்
4.3.6 முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறன்
4.4 பெருக்கி
4.4.1 பெருக்கியின் எடுகோள்கள்
4.4.2 இறுதிநிலை நுகர்வு நாட்டமும் பெருக்கியும்
4.4.3 பெருக்கி செயல்படும் விதம்
4.4.4 பெருக்கியின் வகைகள்
4.4.5 பெருக்கியின் கசிவுகள்
4.4.6 பெருக்கியின் பயன்கள்
4.5 முடுக்கி கோட்பாடு
4.5.1 பொருள்
4.5.2 வரைவிலக்கணம்
4.5.3 எடுகோள்கள்
4.5.4 முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம்
4.5.5 வரையறைகள்
4.6 மிகைப் பெருக்கி (K மற்றும் β இணைத்து)
4.6.1 நெம்புகோல் இயக்க விளைவு



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com